ilakku.org

# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 276 | சனி, மார்ச் 02, 2024 | 14 பக்கங்கள்



தமிழக சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டு நோயுற்று மரணத்தைத் தழுவிய **சாந்தன்** அவர்களுக்கு 'இலக்கு' தலை வணங்குகிறது!




ஈழமகளிர் வாழ்வு மலர
முதலீட்டு
முன்னேற்றுவோம்!
மார்ச் 8 அனைத்துலகப்
பெண்கள் நாள்.
மார்ச் மாதம்
பெண்கள்
வரலாற்று மாதம்.



## கடல்வளங்களை சிதைக்கும் தமிழக இழுவைப் படகுகள்

அகிலன்



அகிலன்


## உலகம் முடக்கும் அடுத்த கட்டத்துக்கு தயாராகும் ஹூதீஸ் அமைப்பு

வேல்ஸ் இல் இருந்து அருஸ்



© 2024 இலக்கு இணையம்

## பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்த திருமலை இந்துக் கல்லூரி மாணவன்





13 வயதான திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவன் ஹரிகரன்தன்வந்த்தனுஸ்கோடியில் இருந்து தலைமன்னார் வரையான பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்துள்ளார்.

இன்றைய தினம் அதிகாலை 5.30 மணியளவில் தனுஸ்கோடியில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த தன்வந்த் மதியம் 2.00

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இந்திய – இலங்கை அரசுகளின் மெத்தனப் போக்கே சாந்தனின் மரணத்திற்கு காரணம்



சாந்தன் நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னரும் இந்திய இலங்கை அரசுகளின் மெத்தனப்போக்கால் ஒன்றரை வருடம் அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை(28) காலமானார் எனும் செய்தி எம்மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சாந்தனின் மறைவு தொடர்பில் 'எக்ஸ்' பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## கனடா செல்கின்றார் அனுரகுமார புலம்பெயர்ந்த இலங்கையர்களுடன் பேசத் திட்டம்



தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அடுத்த மாதம் கனடாவுக்குச் சென்று அங்கு வாழும் இலங்கையர்களிடம் உரையாடவும், சில கனேடிய அரசியல்வாதிகளைச்சந்திக்கவும் திட்டமிட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

அவர் மார்ச் 23 அன்று டொராண்டோவில் ஒரு கூட்டத்தில் உரையாற்றுவார். முன்னதாக, அவர் ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்குச் சென்றார்.

## இந்தியா தயாரித்த மலிவு விலை புற்றுநோய் தடுப்பு மருந்து



பக்க விளைவுகளைக் குறைத்து மீண்டும்மீண்டும்புற்றுநோய் வருவதை தடுக்கும் மருந்தை இந்தியாவின் டாடா நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்தள்ளனர்.

பல பத்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவில் இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது தற்போதைய மருந்துகளுடன் ஒப்பிடும்போது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## புவி வெப்பமடைவதை தவிர்ப்பதற்காக கண்டல் தாவரங்களை வளர்த்தல்



ஒட்சிசனின் அளவை அதிகப்படுத்த கண்டல் தாவரங்கள் வளர்க்க வேண்டிய பிரதேங்களை பார்வையிட்டு உரிய வகையில் எதிர்காலத்தில் கண்டல் தாவரங்களை வளர்த்து எடுப்பதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வழிகாட்டலில், நிதி ஒதுக்கீட்டிலுமாக இவற்றை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரிகள் கிண்ணியாவுக்கு கடந்த புதன்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலால் காசாவில் 30,000 பொதுமக்கள் பலி

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் பாலஸ்தீனத்தின் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தொடர் தாக்குதலால் இதுவரையில் 30,000 இற்கு மேற்பட்ட மக்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் இது அங்கு வாழும் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் 1.3 விகிதம் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் காசா பகுதியின் சுகாதார அமைச்சு கடந்த வியாழக்கிழமை(29) மேலும் தெரிவித்துள்ளதாவது.

கொல்லப்பட்டவர்களில் பெருமளவானோர் குழந்தைகளும் பெண்களுமாவார்கள். கடந்த வியாழக்கிழமை மட்டும் 24 மணி நேரத்தில் 81 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 30,035 பேர் இது வரையில் கொல்லப் பட்டதுடன், 70,000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் பலர் வைத்தியசாலைகளுக்கு எடுத்து வராமல் அடக்கம் செய்யப்பட்டதால் கொல்லப்பட்டவர்களின் தொகை தற்போதைய தகவல்களை விட அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. மேலும் பல ஆயிரம் மக்கள் காணாமல் போயுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.



இதனிடையே, காசா சுகாதார அமைச்சகத்தின் தகவல்கள் மிகவும் நம்பகமானவை எனவும், அவர்களின் தகவல் ஆய்வுப் பணிகள் முன்னைய காலங்களில் சிறப்பாக செயற்பட்டதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## அணுவாயுதங்களை பயன்படுத்த தயங்க மாட்டோம் - பூட்டீன்



ரஸ்ய மக்களும், நாடும் வெளிநாடுகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. அதில் இருந்து நாம் எம்மை பாதுகாப்பதற்கு அணுவாயுதங்களைக் கூட பயன்படுத்துவதற்கு ரஸ்யா ஒரு போதும் தயங்காது என ரஸ்ய அதிபர் விளிமிடீர் பூட்டீன் கடந்த வியாழக்கிழமை(29) தனது நாட்டு மக்களுக்கு ஆற்றிய வருடாந்த உரையில் தெரிவித்துள்ளார்.

ரஸ்யா ஐரோப்பாவில் மிகப்பெரும் பொருளாதாரமாக வளர்ந்துள்ளது. நாம் உலகின் பொருளாதார நாடுகளில் ஐந்தாவது இடத்திற்கு வந்துள்ளோம். ஜி-7 நாடுகளை விட நாம் பொருளாதார வளர்ச்சியில் முன்னனியில் நிற் கின்றோம்.

நேட்டோ தனது படையினரை உக்ரைனுக்கு அனுப்பினால் மிகப்பெரும் அனர்த்தங்களை அவர்கள் சந்திக்க நேரிடும். உக்ரைனைபோல பல ஐரோப்பி நாடுகள் மாற்றமடையும்.

மேற்குலக நாடுகள் உக்ரைன் போரை காரணமாக வைத்து ரஸ்யாவுடன் திரைமறைவு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ரஸ்யாவுடன் போரிட தயாராகின்றது பிரான்ஸ்



உக்ரைனில் ரஸ்யாவுக்கு எதிராக போரிட பிரான்ஸ் துருப்புக்கள் செல்வதற்கு தடையில்லை என கடந்த திங்கட்கிழமை(26) பிரான்சின் அதிபர் இமானுவேல் மக்ரோன் தெரிவித்ததைத் தொடர்ந்து, ரஸ்யா பிரான்ஸிற்கு அச்சுறுத்தலாக உள்ளது என பிரான்ஸின் பிரதமர் கப்ரியல் அட்டால் கடந்த புதன் கிழமை(28) தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்காவில் பிரான்ஸ் தனது பிடியை இழந்ததற்கு ரஸ்யாவே காரணம், ரஸ்யா எமக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகள் படைத்துறை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அதிகரிக்க வேண்டும். எமது படையினர் உக்ரைனுக்கு உதவிகளை வழங்க அங்கு செல்ல வேண்டும். நாம் உக்ரைனின் வான்பரப்பையும் எல்லைகளையும் பாதுகாப்தற்கு தயாராக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா மற்றும் ஜேர்மனியை போல பெப்ரவரி மாதம் பிரான்ஸ் உக்ரைனுடன் தனது பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொண்டிருந்தது. அதன் அடிப்படையில் 3 பில்லியன் ஈரோக்களை இந்த வருடம் வழங்குவதற்கும், SCALP-EG வகை நீண்டதூர 40 ஏவுகணைகளை வழங்கவும்,

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நான்கு கட்டங்களாக நிகழப்போகும் நேட்டோ–ரஸ்ய மோதல்

உக்ரைனுக்கு தனது துருப்புக்களை அனுப்பி அதன் வான் பரப்பையும் எல்லைகளையும் பாதுகாக்கப்போவதாக தெரிவித்துள்ளார் பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோன்.

அவர் தெரிவித்த கருத்து நேட்டோவில் அங்கம் வகிக்கும் பல நாடுகளுக்கு அதிர்ச்சியை கொடுத்ததுதடன், தாம் படையினரை அவ்வாறு அனுப்பப்போவதில்லை என ஜேர்மனி, போலந்து, செக் குடியரசு, சுவீடன், பின்லாந்து, பிரித்தானியா உட்பட பல நாடுகள் உடனடியாக தமது கருத்துக்களை தெரிவித்திருந்தன. நேட்டோவின் தலைவர் ஜென்ஸ்ரேலன்பேர்க்கும் அதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

அதேசமயம் நேட்டோவின் துருப்புக்கள் உக்ரைனில் காலடிவைத்தால் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிக்கும் ரஸ்யாவுக்குமான மோதலாகவே அது பார்க்கப்படும் எனவும், ஐரோப்பா மிகப்பெரும் அழிவுகளைச் சந்திக்கும் எனவும் ரஸ்ய அதிபர் தனது வருடாந்த உரையில் கடந்த வியாழக்கிழமை தெரிவித்திருந்தார்.

அணுவாயுதங்களை பயன்படுத்தவும் தாம் தயங்கமாட்டோம் என்பதையும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். அதற்கு ஏற்றாற்போல தனது நீண்டதூர பலிஸ்ரிக் அணுவாயுதங்களை ரஸ்யா பல பகுதிகளுக்கு நகர்த்தும் காணொளிகளையும் சமூகவலைத்தளங்களில் காணக்கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் உக்ரைன் தோல்வி கண்டால் நேட்டோ படையினர் ரஸ்யாவுடன் மோத வேண்டிய நிலை ஏற்படும் என அமெரிக்காவின் பாதுகாப்புத்துறைச் செயலாளர் லொயிட் ஒஸ்ரின் கடந்த வியாழக்கிழமை தெரிவித்த கருத்தும் உக்ரைன் போர் அடுத்த கட்டத்திற்குள் செல்லப்போவதை உணர்த்தியுள்ளது.

ரஸ்ய படையினர் அடிவ்கா பகுதியினை கைப்பற்றியதும், தொடர்ந்து அவர்கள் முன்நகர்ந்து வருவதும் உக்ரைன் படையினர் தற்பாதுகாப்பு நிலைக்கு சென்றதும் தமக்கு கவலைதருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதாவது உக்ரைன் வசம் தற்போதுள்ள ஆயுதங்களால் ரஸ்யாவை எதிர்கொள்ள முடியாது என்ற நிலையை அவர்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

எனவே தம்வசம் உள்ள நவீன விமானங்கள் மற்றும் ஏவுகணைகளுடன் நேட்டோ களமிறங்குவது தொடர்பில் சிந்திக்க தலைப்பட்டுவிட்டனர்.

இந்த நிலையில் தான் நேட்டோ மீதான ரஸ்யாவின் தாக்குதல் எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பில் ஜேர்மனின் படைத்துறை தலைமையகம் ஒரு மாதிரி வரைபு ஒன்றை தயாரித்துள்ளதாக பில்ட் ஊடகம் தெரிவித்துள்ளது. நோட்டோ நாடுகள் மீதான அணுவாயுதத் தாக்குதல் உட்பட நான்கு கட்டங்களாக இந்த தாக்குதல்கள் நிகழும் சாத்தியங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

13 பக்கங்களைக் கொண்ட இந்த தாக்குதல் அச்சம் தொடர்பான வரைபு அறிக்கை ஜேர்மன் நாடாளுமன்றத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. நேட்டோவுக்கும் ரஸ்யாவுக்கும் இடையிலான போர் ஆரம்பித்தால் ஜேர்மனி மீதான தாக்குதல் நிகழும் சாத்தியங்கள் அதிகம்.

முதல் கட்டமாக ஜேர்மன் மக்களை பிரித்தாளும் நடவடிக்கைகளை ரஸ்யா மேற்கொள்ளும், சைபர் தாக்குதல்கள், முக்கிய நிலையிடங்கள் மீதான தாக்குதல்கள் நிகழலாம். மக்களிடம் தவறாக கருத்துக்கள் பரப்பப்படலாம்.

இரண்டாவது கட்டமாக நோட்டோ நாடுகளின் எல்லைகளை நோக்கி ரஸ்ய படையினர் நகர்வார்கள், செய்மதிகள் தாக்கி அழிக்கப்படும். மூன்றாவது கட்டமாக ஜேர்மனின் மிக முக்கிய ஆயுத மையங்கள் மற்றும் படைத்துறை நிலையிடங்கள் தாக்கி அழிக்கப்படும்.

நான்காவது கட்டமாக தரை, வான் மற்றும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் இறைமையைப் பாரத் லங்கா கூட்டாண்மையிலிருந்து மீட்க அழைக்கிறது சாந்தனின் ஆன்மா

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டும் நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டு திருச்சிச் சிறப்பு முகாமில் உள உடல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுச் சாந்தன் காலமாகியமை தமிழக அரசினதும் மத்திய அரசினதும் சட்டக் கொலையாக உலக வரலாற்றுப் பதிவு பெற்றுள்ளது. ஒரு தாயின் பாசத்தின் மேல் விழுந்த யாராலும் ஈடுசெய்ய இயலாத பெரும் துயரமாக, ஒரு உயிரின் விடுதலைக்கான தேடலை சட்டவிரோதமாக உருக்குலைத்த மனிதாயத்திற்கு எதிரான குற்றமாக மிகக் கொடுமையான மனித உரிமை வன்முறையாக அனைத்துலகச் சட்ட வரலாறு இதனைப் பதிவாக்கியுள்ளது

இதற்கான பொறுப்பைத் தமிழக அரசே ஏற்க வேண்டும் என்ற வகையில் 29.02.2024 அன்று உயர் நீதிமன்றம் மத்திய அரசு சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கு அனுமதி அளித்த நிலையிலும் தமிழக அரசு ஏன் உடன் அனுப்பாது காலதாமதம் செய்தது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இதற்குச் சாந்தனின் நடமாட இயலாத உடல்நிலை காரணமெனச் சாட்டுச்சொல்லித் தமிழக அரசு தப்பிக்க முயன்றாலும் இருதய நோயாளிகளையே தகுந்த பாதுகாப்புடன் வான் அம்புலன்ஸ் மூலம் மிக நீண்ட தூரங்களுக்கே அழைத்துச் செல்லும் இன்றைய உலகில் திருச்சியில் இருந்து பலாலிக்கு ஒரு மணிக்குள்ளேயே பயணிக்கக் கூடிய விமான வசதியிருந்தும் அதனைக் கூடப் பயன்படுத்தாத தமிழக அரசின் செயலும் மத்திய அரசின் செயலும் சாந்தனின் மரணத்தில் அரசியல் பழிவாங்கல் இடம்பெற்றமையையும் இந்தியாவிலும் சட்டத்தின் ஆட்சி ஈழத்தமிழர்களுக்கு இல்லையென்கின்ற உண்மையையும் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது. தமிழக அரசின் இச்செயலுக்கு தாயகத்திலும் உலகிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், யாழ்ப்பாண சிவில் சமுகம் என்பன உட்பட அனைத்து தமிழுணர்வுள்ளவர்களும் தமிழமைப்புக்களும் வெளிப்படுத்தும் பலமான கண்டனத்துடன் ‘இலக்கும்’ இணைந்து கொள்கிறது. வெறுமனே தேர்தல் கோஷமாக தமிழுணர்வையும் தமிழின உணர்வையும் இனியும் திராவிட முன்னேற்றக்கழகம் முன்வைக்கும் நாடகத்துக்கும் தமிழக அரசின் இந்தச் செயல் முற்றுப்புள்ளி வைக்கும் என்பது உறுதி. அத்துடன் இன்னும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டும் மனித உரிமைகள் வன்முறைப்படுத்தலாக அவர்களின் நடமாடும் சுதந்திரம் தடுக்கப்பட்டுச் சிறப்பு முகாமில் தமிழக மத்திய அரசுக்களால் திட்டமிட்ட வகையில் பழிவாங்கும் நோக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றைய மூவரையும் உடன் விடுதலை செய்ய அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் உலகெங்கும் உள்ள தமிழர்கள் உடன் செயற்பட வேண்டும் என்பதையும் ‘இலக்கு’ வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

மேலும் சாந்தனின் மரணமும் மற்றைய மூவரின் நாளாந்த சுதந்திர வாழ்வுக்கான மறுப்பும் பாரத் லங்கா கூட்டாண்மைக்குள் எந்த அளவுக்கு ஈழத்தமிழர்களின் இறைமை முடக்கப்படுகிறது என்பதற்கான மற்றொரு உதாரணமாக அமைகின்றன. எனவே பாரத் லங்கா கூட்டாண்மைக்குள் இருந்து ஈழத்தமிழர்களின் இறைமையை ஈழத்தமிழர்கள் மீள்விக்க உலகநாடுகளும் உலக அமைப்புக்களும் அனைத்துலக சட்டங்களைப் பயன்படுத்தி உடன் உதவ வேண்டுமென்பது இலக்கின் வேண்டுகோளாக உள்ளது. இதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தங்களின் உலகத் தமிழர்கள் என்ற பலத்தைப் பயன்படுத்தித் தாங்கள் வாழும் நாடுகளில் உள்ள மனித உரிமைகளையும் அமைதியையும் பேண உதவும் மக்களுக்கும் அமைப்புக்களுக்கும் தெளிவுகளை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக அவர்களின் அரசுக்களையும் அனைத்துலக அமைப்புக்களையும் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினை குறித்த அக்கறையினை வேகப்படுத்துவிக்க வேண்டும் என்பது இலக்கின் நெறிப்படுத்தலாக உள்ளது. இதுவே சாந்தனின் ஆன்மாவுக்கான வீரவணக்கமாகவும் அமையும்.

இதனை விடுத்துச் சிறு சிறு தீவுகளாக ஈழத்தமிழர்களின் முழுயான பலத்தைத் தாங்களே உடைத்துச் சின்னச் சின்னக் குழுக்களாக பாழ்செய்யும் உட்பகையும் வெறுப்பும் கொண்டவர்களாக விளங்குபவர்களுக்கு ஈழத்தமிழர்களின் இறைமைக்கும் ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இன அழிப்புக்கும் குரல் கொடுக்கும் துணிவு நடைமுறைச் சாத்தியமாகாது. மாறாகத் தாங்கள் ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கும் அரசுகளுக்குத் துணை போய் அவர்களின் முகவர்களாகத் தாங்கள் விரும்பியவாறு ஈழத்தமிழர்களின் உயிரால் முத்திரையிடப்பட்ட தெளிவான முடிவுகளை எல்லாம் மாற்றியமைத்து, ஏதோ ஈழத்தமிழர்களுக்கான பாதுகாப்புக்கும் அமைதிக்கும் எதையோ வெட்டி விழுத்தி விட்ட மாதிரி தோற்றம் காட்டுவதுதான் நடைமுறைச்சாத்தியமாகும். இன்று அத்தகைய அத்தனை உலக ஈழத்தமிழர் அமைப்புக்களுக்கும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஒருவருக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வைக் கூட உருவாக்க உங்களால் இயலவில்லை என்பதையே சாந்தனின் மரணம் சரித்திரமாக்கியுள்ளது.

இனியாவது இந்த தனித்துத் தவில் வாசிக்கும் தன்னல இசைக்கச்சேரிகளை நிறுத்தி விட்டு பொதுத்தளத்தில் ஒருமைப்படுங்கள். அதில் உங்கள் எண்ணங்களையும் பேச்சக்களையும் செயல்களையும் வெளிப்படுத்துங்கள். அதன் பலத்தையும் பலவீனத்தையும் அதனைச் செயற்படுத்தக் கூடிய வாய்ப்புக்களையும் அதற்கு உள்ள அச்சுறுத்தல்களையும் தேசமாகப் பகுத்தாராய்ந்து, அதற்கான சத்தியளித்தல்களைச் செய்வோம். குழுநிலையில் இருந்து விடுபட்டுத் தேசமாக நாம் எழுகின்ற பொழுதுதான் அனைவரது தாயக தேசிய தன்னாட்சி நோக்கிய முயற்சிகளையும் அவை பிரிவினையல்ல பயங்கரவாதமல்ல ஈழத்தமிழர்களின் தேசநிர்மாணச் செயற்பாடுகளென அனைத்துலக அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் விலத்தல் நிலையில் நின்று உள்வாங்கல் நிலைக்குள் உட்படுத்த முடியும். அனைத்துலக அமைப்புக்கள் நாடுகள் வழியான ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலகச் சட்டப்பாதுகாப்பை ஏற்படுத்திட நாங்கள் குழுக்களல்ல ஒரே தேசத்தவர் என்ற முழுமைப்படுத்தல் உடன் அவசியம். இதுவே ஈழத்தமிழரின் இறைமையின் அடிப்படையில் அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் நடைமுறையின் வழியான அவர்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் உறுதிப்படுத்தி அவர்களின் அரசியல் எதிர்காலத்தை அவர்கள் நிர்ணயிக்க உதவும். இதுவே இலக்கின் உறுதியானதும் இறுதியானதுமான எண்ணம். பேசிப்பேசிக் களைத்தது போதும். பேசாது செயலில் இணைவோம். செயலால் உறவுகள் மீளுருவாக்கம் பெறும். உறவுகளின் பிணைப்பு தேசத்தின் நிர்மாணத்திற்கான சத்தியை வெளிப்படுத்தும். அப்பொழுது மக்கள் தலைமைத்துவம் தோன்றும். இந்த மக்கள் தலைமைத்துவம் தான் தேசியத் தலைவரின் கனவு. கனவு நனவாகும். மாண்டவை சனநாயக வழிகளில் மீளும். வாழ்வு மாறுபடுவதேயன்றி அழிக்கப்படுவதில்லை. காலமாகிய சாந்தன் வித்துடல் விடுதலையை ஊக்குவிக்கும் மண்ணினதும் மக்களதும் மீளப்புதுப்பிக்கும் ஆற்றலாக!

**ஆசிரியர்**



# உன் தாய்க்கு மட்டுமல்ல எம் தாய்மண்ணின் மைந்தனும் நீ

சிறகுகள் விரிக்காமலே...
ஒரு சிறைப்பறவையின் வாழ்வு
சிதையுண்டு போகிறது...

தாய்மடி தலைசாயாமல்,
தாய்மண் தடம் காணாமல்,
கனவுகளின் ஏக்கங்கள்
கண்களில் தெறிக்க
கண்மூடிப் போனது அச்
சிறைப்பறவை

வான்வெளி சுமந்துவந்த காற்று
அந்தத் தாய் மனதிற்கு
எந்தவகையில்
ஆறுதலைச் சொல்லிவிடக்கூடும்...

திராவிடம் சொல்லித் திரிந்தும்
தமிழ்த்தேசியம் முழக்கித் திரிந்தும்
புலம்பெயர்ந்து ‘புரட்சிகள்’ புரிந்தும்
‘மனிதம்’ காக்க முடியாக்
கையாலாகாத்

‘தமிழர்கள்’ நாமெனக் காலம்
மீண்டும் கன்னத்தில் ஓங்கி
அறைகிறது...

எம் தேசத்தின் ஆன்ம வலியை
வாழ்நாள் முழுதும் சுமந்தவன் நீ...
சாந்தி அடைய யார் யாரோ
வேண்டினும் சாந்தன் அண்ணா
உன் ஆன்மா எப்படித்தான்
சாந்திபெறும்?

வாழும்நாள் முழுதும் ஏங்கித் தவித்த
உன் தாயின் மைந்தன் மட்டுமல்ல
நீ,
என்றும் எம் தாய்மண்ணின்
மைந்தன் நீ!
சிறகுகள் விரித்த உன்
ஆன்மாவேனும் சுதந்திரமாய் இப்
பிரபஞ்சமெங்கணும் சிறகுவிரித்துச்
சுதந்திரம் காணட்டும்...

-காந்தள்-

# புதுமையில் வளரும் மகளிரின் மாண்பு

சிறையிருத்தி ஆணையிட்ட
பழந்தமிழர் மறைந்திட்டார்
கறைபடிந்த வரலாற்றுக்
காகிதங்கள் எரித்திட்டார்
முறையறிந்து
கலைவளர்த்து மனவுறுதி
பெற்றிட்டார்
திறமைகளி னாலேயரும்
பணிகளிலே
திளைத்திட்டார்

ஆளுமையி லுயர்ந்த
நிலை அருங்கலைகள்
பயிற்றுநெறி
நாளுமறிந் ததன்பயனால்
நற்பயிற்சி பெற்றிட்டார்
வாழுகின்ற நெறிமுறைகள்
எடுத்துரைக்கும்
இயல்பினராய்
ஏழுலகும் வியக்குமொரு
அணியினராய்
உயர்ந்திட்டார்

மெய்யியலில் நாட்டமுற்று
மேனியுரு வலுப்பெறவே
தையலர்க ளென்றுகூறத்
தயங்குமொரு
கோலத்தோடு
வெய்யதுயர்
சுமந்துகொண்டு
வேதனைகள் நீக்குகின்ற
தெய்வமெனக் காட்சிநல்கும்
மகளிரின்று வனப்புமுற்றார்

பழமைபேணும்
புத்தியினிப் பயனளிக்கா
தென்றுணர்ந்து
கழனியிடை களையகற்றிப்
பயிர்செழிக்க
வளர்ப்பதுபோல்
இளமையுற எழில்பெருக்கும்
கயல்விழியி னரிவையெனப்
பழியுரைக்கு மஞ்சாது
பலதொழிலும்
பயின்றிட்டார்

மருத்துவத்திற்
பயிற்சிபெற்று மாண்புநிலை
எய்தியபின்
பெருமைமிகப்
பொறுமையொடு
வருந்துவாரின்
நோய்பிணிகள்
பரிவுடனே ஆய்ந்தறிந்து
மருந்தளித்துப் புரியும்
சேவை
அரும்பணியு
ளொன்றாயெண்ணி
மகளிர்கூடி யகங்களித்தார்

திருமணத்தி லொருவிருப்பு
நினைவிலெழும்
நிலையொதுக்கி
பொருதுகின்ற களம்நாடு
மார்வமே வென்றதாலே
கருவியெடுத் தாளுகின்ற
நெறிமுறைகள்
பயில்வதற்குச்
செருக்களத்தை
நாடுகின்ற ஆளுமையினிற்
றிறனுற்றார்.

கவிஞர் மாரீசன்



# கடல்வளங்களை சிதைக்கும் தமிழக இழுவைப் படகுகள்

**அகிலன்**

எல்லைதாண்டும் மீனவர் பிரச்சினை ஈழத் தமிழர்களுக்கும், தமிழக மக்களுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு நெருடலை நீண்ட காலமாகவே ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், கடந்த வாரத்தில் இது ஒரு உச்சத்தையடைந்திருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வே இல்லையா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கின்றது.

இரு நாட்டு யாத்திரிகள்களும் வருடாந்தம் கலந்து பேசும் கச்சதீவு உற்சவத்தை தமிழக மக்கள் இம்முறை புறக்கணித்தார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தரமுடியாது தத்தளிக்கும் இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் பதவியைத் துறக்கப்போவதாக அறிவித்தார். இலங்கை மீனவர்கள் நடுக்கடலில் கறுப்புக்கொடிப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாக அறிவித்திருக்கின்றார்கள்.

இந்திய மத்திய அரசும், தமிழ்நாட்டு அரசும் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையில் இருக்கும் முரண்பாட்டினைத் தீர்த்துவைக்க எந்த முயற்சியையும் முன்னெடுக்கவில்லை. அதேவேளையில், இலங்கை அரசாங்கம் தமது கடற்சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்தினாலே இந்தப் பிரச்சினை பெருமளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால், இரு நாட்டு மீனவர்களையும் மோதவிட்டு அவர்கள் குளிர் காய்கின்றார்கள். இதனால் முழுக்க முழுக்க பாதிக் கப்படுவது வடபகுதி மீனவர்கள்தான்.

1921ஆம் ஆண்டு இந்திய - இலங்கை பிரிட்டிஷினால் செய்துகொள்ளப்பட்ட மீன்பிடி ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்களுக்குப் பாக்கு நீரிணையில் அதிக கடல்பகுதியும், இலங்கை மீனவர்களுக்குக் குறைவான கடல் பகுதியும் பிரிக்கப்பட்டது. அதில் கச்சத்தீவு உள்ளிட்ட 28 கடல் மைல் பகுதிகள் இந்தியாவுக்கும் நெடுந்தீவு உள்ளிட்ட 12 கடல் மைல் கடல் பகுதிகள் இலங்கைக்கும் என பிரிக்கப்பட்டன. ஆனால், பின்னர் 1974இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அதனால் இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வந்த 500 சதுர கி.மீ. கடல் இலங்கை வசமாகியது. இதனால், தமது பாரம்பரிய மீன்பிடி பகுதிகள் பறிபோனதாக இந்திய மீனவர்கள் கருதுகிறார்கள். ஆனால், 1974 கச்சத்தீவு ஒப்பந்தத்தின் 6ஆம் சரத்துப்படி இந்த 500 சதுர கி.மீ. பரப்பளவில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடிக்க உரிமையுள்ளது. ஆனால், அதனையும் மீறி இந்திய மீனவர்கள் வருவது மட்டும் பிரச்சினையல்ல, அவர்கள் பயன்படுத்தும் வலைகள்தான் பிரச்சினை.

பாக்கு நீரிணைப் பகுதியில் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதும் இழுவை வலைகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதனாலேயுமே பிரச்சினை கள் எழுகின்றன. இந்திய மீனவர்கள் இழுவை வலையைப் பயன்படுத்தக் கூடாது என்பது இலங்கை மீனவர்களின் கோரிக்கை. இந்த நடைமுறையைக் கைக்கொள்ள முடியாமையி னால் ஏற்படும் பிரச்சினை பல தசாப்தங்களாகத் தொடர்கின்றன. இழுவைப்படகுகளின் செயற் பாட்டினால், இலங்கைக் கடற்பரப்பிலுள்ள மீனும் பிற வளங்களும் அழிகின்றன. இழுவை வலைகள் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளன.




ஆனால், இந்திய மீனவர்கள் இழுவை வலைகளுடன் வடபகுதிக் கரை வரையில் வருவதால், இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான சூறையாடலுக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவும் இருக்கிறது என்பதே இலங்கை மீனவர்களது கருத்து. அதற்கு இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்படும் தமது மீனவர்களது விடுதலை தொடர்பில் கொடுக்கப்படும் அழுத்தம் உதாரணமாகக் காட் டப்படுகிறது. யுத்த காலங்களிலும் இப்பிரச்சினை இருந்திருந்தாலும் அது மிகவும் குறைவாகவே இருந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னர் அதிகரித் திருப்பதாகவே உணரப்படுகிறது.

இலங்கை அரசாங்கமானது இப்பிரச்சினை யைப் பூதாகாரமாக்குவதற்கு இலங்கைத் தமிழர்கள் தமிழக மீனவர்களுடனும், இந்தியாவுடனும் முரண்படும் நிலை அல்லது முறுகல் நிலை ஏற்படுவதற்காக இருக்கலாம் என்ற சந்தேகம் காணப்படுகிறது. அதேநேரத்தில், இந்தியா ஆதிக்க மனோநிலையிலேயே செயற்படுகிறது என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

இலங்கையர்கள் மாத்திரமன்றி, இந்தியப் பக்தர்களும் இணைந்து வருடம்தோறும் வெகு விமர்சையாக கொண்டாடும் கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இவ்வருடம் இந்தியர்களில்லாது நடைபெற்று முடிந்திருக்கிறது. திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து 4,454 பக்தர்கள் கலந்துகொண்டனர். இந்தியப் பக்தர்கள் மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி எவரும் வருகை தரவில்லை. பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந் தன.

இத்திருவிழாவுக்கு அரசியல் சாயம் பூசப் படாது, ஆன்மீக நலன்களை மேவும் புனிதமான திருவிழாவாக நடைபெறவேண்டுமென்பதே கத் தோலிக்க மக்களின் வேண்டுகோளாகும் என்று திருவிழாவை இந்தியர்கள் பகிஷ்கரிக்கக்கூடாது எனவும் கருத்துக்கள், வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, தீர்க்கப்படாமல் இழுபட்டுச் செல்லும் இரு நாட்டு மீனவர் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டும். ஆனால், இது குறித்து பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும் அனைத்தும் தோல்வியில்தான் முடிவடைந்தன.

இழுவை மடிகளைக் கொண்ட ரோலர் படகுகள் கடல் வளத்தை நாசப்படுத்திக் கொண் டிருப்பதனை அனுமதிக்க முடியாது. சாதாரண நாட்கூலிகளான மீனவர்கள் ரோலர் படகுகளின் சொந்தக்காரர்களான முதலாளிகளின் பிடிகளுக் குள் அகப்பட்டு இதனைச் செய்வதாகச் சொல் லப்படுகின்றது. கடல் சட்டத்தையும், இழுவை மடி வலைகளுக்கு இலங்கையில் உள்ள தடை யையும் கண்டிப்பாக இலங்கை கடற் படை நடை முறைப்படுத்தினால், இதனைத் தடுக்க முடியும். அதேவேளையில், இலங்கைக் கரை வரையில் வந்து இழுவை படகுகளைப் பயன் படுத்தி மீன்பிடிப்பது தமது உரிமை என்பது போல தமிழக மீனவர்கள் செயற்படுகின்றார்கள். இதனைக் கேள்விக்குட்படுத்த முடியாது என்பது போலவும் தமிழக அரசியல்வாதிகள் பேசுகின்றார் கள்.

இந்திய இழுவை படகுகளுக்கு எதிரான கறுப்புக் கொடி போராட்டம் ஒன்றினை இந்திய- இலங்கை கடல் எல்லையில் நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்திய இழுவை படகுகள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தொழில் முதல்களை அழித்து வந்தவேளை, இலங்கை கடற்படையினரால் அந்த இந்திய இழுவைப்படகுகள் கைப்பற்றப்பட்டு அதில் பயணித்த கடற்றொழிலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பாலானவர் கள் இந்திய அழுத்தம் காரணமாக விடுவிக்கப் படுகின்றார்கள். இப்போது இந்திய அரசாங்கம், அந்த கடற்றொழிலாளர்களை விடுதலை செய்யு மாறு இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

“கைது செய்த மீனவர்களுக்குத் தக்க தண்டனையைக் கொடுக்க வேண்டும் எக்காரணம் கொண்டும் அவர்களிடம் மண்டியிடக் கூடாது” என்ற பிடிவாதத்துடன் இருக்கின்ற இலங்கை மீனவர்களுக்கு அரசாங்கங்கள் எவ்வாறான முடிவைக் கொடுக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்திய இழுவைப் படகுகள் பல சூழலியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. மீன்களின் பெருக்கமும் வளர்ச்சியும் இப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ரணிலின் தெரிவு இதுதான்! குழப்பத்தில் ராஜபக்ஷக்கள்



## அரசியல் ஆய்வாளர் யதீந்திரா

**இலங்கையில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. முக்கியமான நகர்வுகளைப் பார்க்க முடிகிறது. பொலிஸ் அதிகாரம் இல்லாத அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பதில் ராஜபக்ஷக்கள் குழம்பிப்போயுள்ளார்கள். இந்த நிலையில் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான யதீந்திரா அவர்கள் முன்வைத்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan) செய்யவும்.**

**பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்துவிட்டு 13 ஆவது திருத்தத்தின் மூலமாக அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக சிறுபான்மையினக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தான் தயாராக இருப்பதாகவும், அடுத்த வாரத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார். இந்த வேளையில் இவ்வாறான அறிவிப்பை அவர் எதற்காக வெளியிட்டிருக்கின்றார்?**

ஜனாதிபதி இதற்கு முன்னரும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகப் பேசத் தயார் என கூறியிருந்தார். அதனைவிட, கடந்த வருடத்தில் சுதந்திர தினத்துக்கு முன்னதாகத் தீர்வைக் காணப் போவதாகவும் கூறியிருந்தார். ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. இப்போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப்போவது உறுதியாகியிருக்கும் சூழலில், அந்தத் தேர்தலில் அவர் போட்டியிடப்போவதும், உறுதியாகியிருக்கின்ற பின்னணியில் இந்தக்கருத்தைஅவர்வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரையில் அவ்விதம் ஆக்கபுர்வமான விடயங்கள் எதுவும் நடைபெறப்போவதில்லை. இப்போது, பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 ஆவது திருத்தம் தொடர்பாகப் பேசப்போவதாகச் சொல்வதெல்லாம் தேர்தலை இலக்காகக் கொண்ட உத்தியாக மட்டுமே இருக்க முடியும். ஏனெனில், பறிக்கப்பட்ட அதிகாரங்களுடன் அதிகாரப் பரவலாக்கலை வழங்குதென்பது தற்போதுள்ள சூழ்நிலையில் வழங்குவதற்கான வாய்ப்பு இல்லை. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், பல்வேறு தரப்புக்களின் ஆதரவையும் பெற வேண்டிய நிலையில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, நிச்சயமாக அவற்றைச் செய்யப்போவதில்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை.

தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடலாம். இதன்மூலம் மற்றவர்களைவிட சில விடயங்களைச் செய்வதற்கான விருப்பத்துடன் தான்இருப்பதாக–அதுகுறித்துதமிழ்க்கட்சிகளுடன் பேசத் தயாராக இருப்பதாகவும் தமிழ் மக்களுக்குக் காட்டிக்கொள்வதற்காகத்தான் இவ்வாறான கருத்துக்களை அவர் சொல்வதாகத்தான் நான் நினைக்கிறேன்.

**சிங்களத் தேசியவாதக் கட்சி ஒன்றின் தலைவரான உதய கம்மன்பிலவும், 13 ஆவது திருத்தத்தின் இருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கான அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்திருக்கின்றார். இவ்விடயத்தில் அவரது இலக்கு என்ன?**

இதுவும் தேர்தலை இலக்காகக்கொண்ட ஒரு நகர்வுதான். கம்மன்பில போன்ற தேசியவாதிகள் நீண்ட காலமாகவே இவ்வாறு 13க்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருபவர்கள்தான். குறிப்பாக வட, கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் போன்வற்றைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளார்கள். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலைத் தொடர்ந்து தென்பகுதியில் இவர்களுடைய செல்வாக்கு பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இவர்கள் அனைவரும் கோட்டாபயவின் துாண்களாகச் செயற்பட்டவர்கள். அதனால், கோட்டாபயவின் வீழ்ச்சியின் ஒரு அங்கமாகத்தான் இதனையும் பார்க்க வேண்டும்.

இந்த நிலையில் மீண்டும் ஒரு தேர்தல் நெருங்கிவரும் பின்னணியில் சிங்கள மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்வதற்கும், தங்களை மீண்டும் பலப்படுத்திக்கொள்வதற்குமான ஒரு உத்தியாகத் தான் இந்த விடயங்களை அவர்கள் கைகளில் எடுக்கின்றார்கள். 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இனநெருக்கடிக்குத் தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்திருந்த ஒரு நிலையில்தான் பௌத்த பிக்குகள் 13 ஆவது திருத்தத்தின் நகலை எரிப்பது போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்கள்.

இப்போது தேர்தல் நெருங்கிவரும் சந்தர்ப்பத்தில் பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 ஆவது திருத்தம் என்ற கருத்தை உதய கம்மன்பில போன்றவர்கள் முன்வைக்கின்றார்கள். அவ்வாறு முன்வைப்பதற்கு பிரதான காரணம் இந்தத் தேர்தல் காலத்தில், வீழ்ச்சியடைந்திருக்கும் தமது ஆதரவுத் தளத்தை உயர்த்திக்கொள்வதுதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவது. அதேவேளையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவதும், ஒரு கட்டத்துக்கு மேல் அவரால் தனித்து செயற்பட முடியாது என்ற நிலையை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாக இருக்கலாம்.

முக்கியமாக, இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலம் முதல் இவ்வாறான கருத்துக்களைத்தான் சிங்கள தேசியவாதிகள் முன்வைத்து வருகின்றார்கள். இந்திய மேலாதிக்கத்தின் ஒரு நீட்சியாகவே இது உள்ளது என இவர்கள் பிரசாரங்களையும் முன்னெடுத்து வந்துள்ளார்கள்.

தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு இந்தியாவைத்தான் பெருமளவுக்கு நம்பியுள்ளது. இந்த நிலையில், இந்திய அழுத்தங்களுக்கு உட்பட்டு இந்த 13 போன்றவற்றை ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு வழங்கிவிடுவார் என்பது போன்ற கருத்துக்களை சிங்கள மக்களிடம் கோண்டு செல்வதன் மூலம், தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்ளலாம் என்று சிங்களத் தேசியவாதிகள் சிந்திக்கின்றார்கள்.

**ஜனாதிபதித் தேர்தலுக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்கடும் நிலையில், ரணில் விக்கிரமசிங்க எந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்பதில் குழப்பமான கருத்துக்களே வருகின்றன. உங்களைப் பொறுத்தவரை அவர் எந்தக் கட்சியில் போட்டியிடுவார்?**

என்னுடைய அவதானிப்புக்களைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே தெரிகின்றது. அவர் ஒரு சுயாதீன வேட்பாளராகக் களமிறங்குவதற்கான வாய்ப்புக்களே இருப்பதாகத் தெரிகின்றது. ஏனெனில், ஐ..க.வின் சார்பில் அவர் போட்டியிட்டால், ஏனைய கட்சிகளைச் சார்ந்தவர்கள் இவரை ஆதரிக்கமாட்டார்கள்.

அதேவேளையில், ரணில் வெகுஜன கவர்ச்சி - வசீகரம் மிக்க ஒரு தலைவரல்ல. கடந்த காலங்களில் அவரால் ஜனாதிபதித் தேர்தல்களில் வெற்றிபெற முடியவில்லை. தனித்து சிங்கள வாக்குகளால், அவரால் வெல்லவும் முடியாது.

ஆனால், இந்தப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளக்கூடிய ஆளுமையுள்ள ஒருவர் இவர்தான், இவரை விட்டால் யாரும் இல்லை என்ற ஒரு கருத்துள்ளதைப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொல்பொருள் என்ற போர்வையில் மத சுதந்திரத்துக்கும் தடையா??

திருமலையான்

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கிராமமே தென்னைமரவாடி. இக் கிராமத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்களது ஜீவனாம்சத்தை அன்றாட கூலி தொழில் மூலமே வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இருந்த போதிலும் அண்மையில் தென்னமரவடி கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் மாதாந்த பௌர்ணமி தின பொங்கல் நிகழ்வில் ஈடுபட முயன்ற பொதுமக்கள் முப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள சம்பவம் ஒன்று *(23.02.2024)* அன்று மாலை இடம் பெற்றுள்ளது.



திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவடி கிராமத்தில் உள்ள மிகப்பழமையான கந்தசாமிமலை முருகன் ஆலயத்தில் மாதாந்தம் கிராம மக்களால் பௌர்ணமிதினபொங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுவந்த நிலையில் குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வெருகல், மூதூர், திருகோணமலையைச் சேர்ந்த 50க்கு மேற்பட்ட பொது மக்கள் வருகைதந்திருந்திருந்தனர். இதன்போது அப்பகுதியில் 400க்கு மேற்பட்ட பொலிசார் மற்றும் முப்படையினர் குவிக்கப்பட்டு அப்பகுதிக்குள் நுழையவிடாது பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகைதந்த AHRC நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, சமூக செயற்பாட்டாளர் நவரெத்தின ராசா அஞ்சலி, ஆலய தலைவர் வைரமுத்து விஜயநாயகம் உட்பட அகம் அமைப்பின் அங் கத்தவர்கள், எல்லா அங்கத்தவ தமிழ் தேசிய மக்களும் என குறிப்பிட்டு புல்மோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரியினால் தடையுத்தரவு வழங்கப்பட்டதுடன் ஏனைய பொதுமக்களும் தடுக்கப்பட்டனர்.



இதன்போது குறித்த இடம் பௌத்த விகாரைக்கு உரியது எனவும் நீதிமன்ற தடை இருப்பதன் காரணமாக எவரையும் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்து பொதுமக்களை பொலிசார் திருப்பி அனுப்பினர்.

இவ்வாறு சிறுபான்மை சமூகத்தை தொல்பொருள் என்ற போர்வைக்குள்ளும் அடக்கி ஒடுக்க முனைகின்றனர். புல்மோட்டை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதவான் ஊடான தடை உத்தரவை பெற்று குறித்த இடமானது தொல்லியல் பிரதேசம் எனவும் யாரும் அங்கு செல்லவோ எதுவும் செய்தவோ முடியாது எனவும் குறித்த பகுதி சங்கமலை புராதன விகாரைக்கு சொந்தமான தொல்லியல் பிரதேசம் எனவும் கூறி மதக் கடமைகளை செய்ய விடாது தடுத்து நிறுத்தினர். இது தொடர்பில் அப் பகுதி பிரதேச



வாசி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார் " 1980க்கு முன் இருந்து வாழ்ந்து இடம் பெயர்ந்து இந்த பூமியில் பூசை நடத்துதல் முதல் நேர்ச்சை வைப்பது தொடக்கம் கதிர்காம யாத்திரையின் போதான அன்னதானமும் செய்து வந்தோம். ஒவ்வொரு பருவத்துக்கும் வேளாண்மை செய்கையின் போது பொங்கல் பூசை உட்பட அன்னதானம் என சகல விடயங்களையும் செய்து வருகிறோம். தற்போது தடை விதிக்கின்றனர்" என்றார்.

தமிழ் மக்களின் அடையாளமாக காணப் படும் இந்த இடம் அவர்களது மதக் கடமைகளை செய்ய விடாது தடுத்து நிறுத்துமளவுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதுடன் சுதந்திரம் பறிக்கப்படுகிறது எந்த அரசாங்கம் ஆட்சிக்கு மாறி மாறி வந்தாலும் சிறுபான்மை சமூகத்தின் மீதான பார்வை வித்தியாசமானதாகவே ஆக்கிக் கொள்கின்றனர். இலங்கை அரசியல் அமைப்பில் உரிமைகள் மற்றும் மதச் சுதந்திரம் தொடர்பில் தெளிவாக சொல்லப்பட்ட போதிலும் இங்கு நடை முறையில் அவ்வாறு இல்லை அதனை மாற்றியே நடை முறைப்படுத்துகின்றனர்.

"இந்த பூமி தற்போது புத்தர் பூமியாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாம் என பொலிஸார் கூறுகின்றனர். இதை விட்டு போங்க என்று பொலிஸார் கூறுகின்றனர் இங்கு இராணுவம், புலனாய்வுத் துறையாளர்கள், விசேட அதிரடிப்படையினர் வந்துள்ளனர். ஒவ்வொரு பருவத்திலும் பூசை செய்வது வழக்கம் இப்போது மாத்திரம் ஏன் தடை போடுகின்றனர் எங்கள் கடவுளை வழிபடவும் பௌர்ணமி பொங்கலை செய்யவும் விடாது தடுக்கின்றனர் " என அக் கிராமத்தை சேர்ந்த தாய் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு பல சிறுபான்மை சமூகத்தின் காணிகள் தொல்பொருள் என்ற போர்வையில் கபளீகரம் செய்கின்றனர். காலம் காலமாக மத வழிபாடுகளை மேற்கொண்ட இக் கிராம மக்கள் யுத்தத்தின் பின் 2010 ல் மீளக்குடியேறி இவ் ஆலயத்தில் அவர்களது மதச் சடங்குகளை செய்தே வந்தனர் ஆனால் அப்பட்டமான தடை உத்தரவை விதித்து அவர்கள் மீது சேறு பூச முனைகின்றனர். மஹிந்த ராஜபக்ச காலம் தொடக்கம் எந்த ஜனாதிபதி வந்தாலும் காணி அபகரிப்புக்கு தீர்வில்லாமலேயே சிறுபான்மை சமூகம் ஏங்கித் தவிக்கின்றனர். சிறுபான்மை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அரசியல் துறை சார் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து மக்களின் இது போன்ற உரிமை விடயத்தில் சாதகமான முடிவுகளை பெற கைகோர்த்து நிற்க வேண்டும்.

"கந்தசாமி மலையில் பொங்கலுக்கு தடை விதிக்கின்றனர் இது எங்கள் பூமி இதனால் மனம் வருந்துகிறோம் 2010ல் இருந்து இங்கு தற்போது வரை வாழ்ந்து வருகிறோம். இங்கு பொங்குவது முதல் நேர்த்தி வைத்து எல்லா விடயங்களையும் முன்னெடுப்பது வழமை "அக் கிராமத்தை சேர்ந்த ஒருவர் இதன் போது ஆதங்கத்தை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினார்.



இப் பகுதியை அண்டிய பல காணிகள் அரிசி மலையை அண்மித்தும் அபகரிப்பு செய்யப்பட்டுள்ளது கடந்த காலங்களில் இது இடம் பெற்றுள்ளதுடன் தற்போதும் இடம் பெறுகிறது அரிசி மலையை அண்டிய பௌத்த விகாரையின் விகாராதிபதி இது விடயத்தில் மக்களது விவசாய பூமியை அவர்களை விவசாயம் செய்ய விடாது தடுத்து நிறுத்தியுள்ளார். இவ்வாறு அடாவடித்தனத்தில் காணிகளை கபளீகரம் செய்து சிறுபான்மை மக்கள் மீதுள்ள நம்பிக்கையை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# உரிமைகளுக்கு வித்திடும் தொழிற்சங்க பலம்

சமகாலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு உரிமை மீறல்களுக்கும் உள்ளாகிவருகின்றனர். இந்நிலையில் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளச் செய்வதில் தொழிற்சங்கங்களின் வகிபாகம் அதிகமாகும். இதனை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கு தொழிற்சங்கங்கள் ஐக்கியத்துடனும் கட்டுக் கோப்புடனும் செயற்பட வேண்டியது அவசியமாகும். இதிலிருந்தும் தொழிற்சங்கங்கள் விலகிச் செல்லுமிடத்து பாதக விளைவுகள் பலவற்றுக்கும் தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.




தொழிற்சங்கக் கலாசாரம் என்பது மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒன்றாக விளங்குகின்றது. பல வகைகளில் தொழிற்சங் கள் தொழிலாளர்களுக்கு தோழனாக விளங்குகின்றன. உலகில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கக் காரணம் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உரிமைகள் என்பவற்றைப் பேணி அவர்களை சுதந்திரமானவர்களாக வாழவைப்பதற்காகும். இந்நிலையில் தொழிலாளர் ஒருவர் தான் சார்ந்துள்ள தொழிற்சங்கத்தினதும், தனது நாட்டு தொழிற்சங்க இயக்கத்தினதும் வரலாறு குறித்து தெரியாமலும், தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதன் முக்கியத்துவத்தை உணராமலும், தொழிற்சங்கமொன்றில் தனது உரிமைகள் என்ன? கடமைகள் என்ன? என்பதை அறிந்து கொள்ளாமலும் இருக்கும் வரையில் ஒரு தொழிற்சங்கத்தினால் அவருக்கு எவ்வித பலன்களோ அல்லது அவரால் தொழிற்சங்கத்திற்கு எவ்வித நன்மைகளோ ஏற்படப்போவதில்லை. மாறாக இவர் தொழிற்சங்கத்தில் வெறுமனே அர்த்தமற்ற ஒரு அங்கத்தவராக இருக்க வேண்டிய ஒரு நிலையே ஏற்படும் என்பது சிரேஷ்ட தொழிற்சங்கவாதிகளின் கருத்தாகும்.

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு ஆற்றும் பணிகள் அளப்பரியன. அவை பின்வருமாறு அமைந்துள்ளன. தொழிலாளர்க ளின் கல்வி அபிவிருத்திக்கு வலுசேர்ப்பது இதில் முக்கியமானதாகும். கல்வி நடவடிக்கைகள் இரு வகைப்படும். தொழிற்சங்க நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு தொழிற்சங்கக் கல்வி தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. மற்றையது அறிவை வளர்ப்பதற்கான முறைசார் கல்வியாகும். மேலும் கல்வி சம்பந்தமான புலமைப் பரிசில்களை சுயமாகவும் சர்வதேச, தேசிய நிறுவனங்களுடன் இணைந்தும் பெற்றுக் கொடுப்பதும் தொழிற்சங்கங்களின் இலக்காகும். அத்தோடு கலை, கலாசார, விளையாட்டு அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளுக்கும் தொழிற்சங்கங்கள் தம்மாலான உச்ச கட்ட பங்களிப்பினை வழங்க வேண்டிய தேவையுள்ளது. இவற்றோடு மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் ஊடாக சமூக அபிவிருத்தி திட்டங்களுக்கு பங்களிப்பு நல்குவதையும் தொழிற்சங்கள் ஒரு குறிக்கோளாகக் கொண்டுள்ளன.



துரைசாமி நடராஜா

இவற்றுடன் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே தொழில் ரீதியான பிணக்குகள் ஏற்படும்போது அவற்றை தீர்த்து வைப்பதிலும் தொழிற்சங்கங்களின் வகிபாகம் அதிகமாகும். சுமுகமான பேச்சுவார்த்தை, சட்ட ரீதியான முயற்சிகள், வேலை நிறுத்தப் போராட்டங்கள், மெதுவாக பணி செய்யும் நடவடிக்கைகள் என்று பல அணுகுமுறைகளையும் பின்பற்றி தொழிலாளர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க தொழிற்சங்கங்கள் முற்படுகின்றன. மேலும் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு தொழிலாளர்கள் சார்ந்த சட்டங்கள், விதிமுறைகள், தீர்மானங்கள் என்பவற்றை ஆட்சியாளர்கள் உருவாக்குவதற்கும் தொழிற்சங்கங்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

**நாடுகடத்தப்பட்ட பிரிஸ்கேடில்**

இந்த வகையில் மலையக தொழிற்சங்க கலாசாரம் குறித்து நோக்குகின்றபோது மலையக பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்கள் உள்நுழைவது ஒரு இலகுவான காரியமாக இருக்கவில்லை. 'தோட்ட உரிமையாளர்கள் தொழிற்சங்க இயக்கம் தோற்றம் பெறுவதை கடுமையாக எதிர்த்தனர். 20 ம் நூற்றாண்டில் நகர்ப்புறங்களில் எழுந்த தொழிற்சங்க இயக்கம் நகர தொழிலாளர்களையும், தோட்டத் தொழிலாளர்களையும் கூட்டாக இயக்கும் முயற்சிகளிலோ அல்லது பெருந்தோட்டப் பகுதிகளுக்கு இயக்கத்தைவிரிவுபடுத்தும் நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை.

1930ம் ஆண்டளவில் இந்தியத் தொழிலாளர்கள் இந்நாட்டில் நிரந்தரமாக வேரூன்றிய போதிலும் நகர்ப்புறத்தில் வளர்ச்சியுற்ற தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அவர்களை அந்நியர்களாகவே கருதினர். கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வேலை நிறுத்தங்கள் நடை பெற்றபோது தோட்ட உரிமையாளர்கள் தமது தொழிலாளர்கள் நகரங்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு தடை செய்தனர். அவ்வேலை நிறுத்தங்கள் தோட்டங்களுக்குப் பரவுவதை தவிர்க்கவே அவ்வாறு செய்தனர். 1920 களில் நகரத் தொழிலாளர் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டபோது தோட்டத் தொழிலாளர்களுக்கென்று போராட தொழிற்சங்கங்களோ அல்லது வேறு பொதுநல சங்கங்களோ உருவாகி இருக்கவில்லை. தொழிற்சங்க இயக்கத்தினர் தோட்டங்களுக்குச் சென்று பணியாற்ற முடியாதபடி 1917 ம் ஆண்டின் 38 ம் இலக்கச் சட்டம் தடைவிதித்தது' என்று புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி தொழிற்சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட பிரேஸ்கேடில் என்ற அவுஸ்திரேலியர் நாடு கடத்தப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் தெரிந்ததாகும். 1925 ம் ஆண்டின்பின்னர், இந்திய தேசிய இயக்கத்தினால் கவரப்பட்ட கோ.நடேசையர் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் கூடிய அக்கறையை வெளிப்படுத்தத் தொடங்கினார். தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் அக்கறை செலுத்தாததைக் கண்டித்து பிரசுரங்களை வெளியிட்டார். 1926 - 1931 காலப்பகுதியில் சட்ட சபையில் இந்திய உறுப்பினராக பதவிவகித்த நடேசையர் தொழிலாளர்களின் சார்பில் ஈடுபாட்டுடன் வாதாடியிருந்தார்.



பல்வேறு நெருக்கீடுகளுக்கு மத்தியில் தோட்டத்தில் உள்நுழைந்த தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அவர்கள் வாழ்விலிருந்தும் பிரிக்க முடியாத சக்தியாக உருவெடுத்தன என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் சமகாலத்தில் தொழிற்சங்களின் பணிகள் தொடர்பில் அதிருப்தியான வெளிப்பாடுகள் தொழிலாளர்களிடையே இருந்து வருகின்றன. தொழிற்சங்கவாதிகள் அரசியல் பிரவேசத்திற்கு ஏணியாக தொழிற்சங்கங்களை பயன்படுத்தி வருவதாலும் ஏனைய பல நிலைமைகளினாலும் தொழிற்சங்க கலாசாரம் இன்று படிப்படியாக வலுவிழந்து வருவதாக தொழிலாளர்கள் விசனப்படுகின்றனர். எனினும் சமகாலத்தில் தொழிற்சங்க கலாசாரத்தின் தேவைப்பாடு அதிகளவில் உணரப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களின் சவால்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. தொழில் ரீதியான நெருக்கீடுகள் மற்றும் உரிமை மீறல்கள் இதில் அதிகமாகும். தொழிலாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு நலன்களையும் தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள போதும் கூட்டு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் பலவற்றையும் நிர்வாகத்தினர் மீறி வருவதாக தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதனைக் கண்டித்து மலையகத்தின் பல பகுதிகளிலும் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்த சம்பவங்களும் அதிகளவில் பதிவாகியுள்ளன.

உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது தொழிலாளர்களுக்கு கானல் நீராகியுள்ளது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# 2009 பின்னரான ஈழத்தின் இருண்ட காலத்தினை பேசும்

# “ ஊழி ”




சினம்கொள் திரைப்படத்தின் மாபெரும் வெற்றியினைத்தொடர்ந்து இயக்குநர் ரஞ்சித் ஜோசப் அவர்களின் நெறியாள்கையில் உரு வாகியுள்ள “ஊழி” திரைப்படத்தின் பெயரை அறிமுகம் செய்வதோடு அதன் முதல்விளம்பரத்தை வெளியிட்டு வைப்பதில் ஈழத்திரை இணையம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை என ஈழத்தமிழர் தாயகத்தின் பல பாகங்களில் தொடர்ச்சியாக நடைபெற்ற படப்பிடிப்பு, கடந்த வெள்ளிக்கிழமையன்று இனிதே நிறைவடைந்ததாகவும் சுடச்சுட அதற்கான படத்தொகுப்புப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருவதாகவும் இயக்குனர் ரஞ்சித் ஜோசப் ஈழத்திரை இணைய ஊடகத்திற்குக் தெரிவித்தார்.

இயக்குநர் ரஞ்சித் ஜோசப்பிடம் ஈழத்திரை இணையம் இத்திரைப்படத்தின் கரு பற்றி வினவியபோது. இக்கதையானது ஈழத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையறிதலுக்கான நீதியின் பயணத்தில் கடந்த 2,500 நாட்களைத்தாண்டிப் போராடி வருபவர்களில் ஒரு குடும்பத்தின் கதையாகப் புனையப்பட்டுள்ளது என்றும் தான் சினம்கொள் திரைப்படப் படப்பிடிப்பிற்காக தாயகம் வந்திருந்தபோது சந்தித்த நபர்களின் கதைகளையும் தொடர்ந்தும் தாயகத்தில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட பண்பாட்டு அழிப்பு போன்றவற்றையும் மையமாக வைத்து இக்கதையினைப் பின்னியதாகவும் குறிப்பிட்டார்.

இத்திரைப்படத்திற்கான உரையாடல்களை எழுத்தாளர் தீபச் செல்வன் எழுதியுள்ளதாகவும், தாயகக்கலைஞர்கள் மற்றும் பெரும் பான்மையான தாயகத் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஊழி திரைப்படத்தில் பணியாற்றியுள்ளதாகவும், இவர்களுடன் யாழ் பல்கலைக்கழக ஊடககற்கை மாணவர்கள், பாலு மகேந்திரா நூலகம் மற்றும் கற்கை மையத்தில் பயின்ற மாணவர்கள் பணிபுரிந்ததாகவும், தொழில் ரீதியான திரைப்படத்துறை உருவாவதற்கான அனைத்து அறிகுறிகளும் தென்படுவதாகவும் ஊழி திரைப்படத்தின் இயக்குநர் ஈழத்திரை இணைய ஊடகத்திற்குக் தெரிவித்தார்.

2024 ஜனவரி 15ஆம் நாள், ஊழி திரைப்படத்தினை வெளியிடும் நோக்கில் தயாரிப்புப்பணிகள் கடந்த ஆண்டு ஆரம்பமாகியதாகவும், படப்பிடிப்பின் போது நிலவிய சீரற்ற காலநிலை உள்ளிட்ட சில தடங்கல்களினால் குறித்த நேரத்திற்கு படப்பிடிப்பை முடிக்க முடியாமற் போனதாகவும், இருப்பினும் தற்போது வந்துள்ள காட்சிகள் யாவும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன என்றும், ஏற்கனவே படத்தொகுப்புப்பணிகள் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும், ஊழி திரைப்படத்தின் பெயர் மற்றும் முதற்பார்வையினை தமிழர் திருநாளாகிய இன்று வெளியிடுவதில் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் இயக்குனர் ரஞ்சித் ஜோசப் ஈழத்திரை இணைய ஊடகத்திற்குக் மேலும் தெரிவித்தார்.

ஊழி திரைப்படம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14ம் திகதி ஈழக்காண்பி திரையோடைத்தளத்தில் உலகெங்கும் ஒரே நேரத்தில் வெளியாகவுள் ளதாகவும், இதே போன்று பிரத்தியேகமாகத் தாம் மேலும் சில திரைப் படங்களைத் தயாரித்து வருவதாகவும் ஈழக்காண்பி (Eelamplay) நிர்வாகம் ஈழத்திரை இணைய ஊடகத்திற்குக் தெரிவித்தனர். 2012 ஆம் ஆண்டு Ar-sen Anton Ostoji அவர்களின் நெறியாள்கையில் வெளிவந்த பொஸ்னிய (Bosnia) திரைப்படமாகிய “ஹலிமாவின் வழி” (பொஸ்னிய மொழித் தலைப்பு: Halimin put, ஆங்கில மொழித் தலைப்பு: Halima’s Path) உலக அரங்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத்தேடும் தாயின் வலியை மட்டுமன்றி அப்போரின் கொடிய முகத்தினையும் உலகப் பார்வையாளர்களுக்குக் கொண்டுசேர்த்திருந்தது.

அந்தவகையில் ஈழத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக இவ்வாறான திரைப்படங்கள் வெளிவருவது வரவேற்க்கப்படக் கூடிய விடையமே. ஊழி திரைப்படம் வெற்றிபெற ஈழத்திரை இணையம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. (14.01.2024) இரண்டாம் இணைப்பு (02.02.2024): ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழப் பிரதேசத்திலும் சரி தீவின் ஏனைய பிரதேசங்களிலும் சரி இன அழிப்பு அரசால் திட்டமிட்டு தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுவதும், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட பண்பாட்டு அழிப்பு போன்ற இன அழிப்புக்குரிய பத்து நிலைகளிலும் ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்தும் தீவிரமாகவும் அதேநேரத்தில் நுட்பமாகவும் செயற்படுத்து வருகின்றது.

***The stages are:***

*1. Classification: The differences between people are not respected. There’s a division of ‘us’ and ‘them’ which can be carried out using stereotypes, or excluding people who are perceived to be different.*

*2. Symbolisation: This is a visual manifestation of hatred. Jews in Nazi Europe were forced to wear yellow stars to show that they were ‘different’.*

*3. Discrimination: The dominant group denies civil rights or even citizenship to identified groups. The 1935 Nuremberg Laws stripped Jews of their German citizenship, made it illegal for them to do many jobs or to marry German non-Jews.*

*4. Dehumanisation: Those perceived as ‘different’ are treated with no form of human rights or personal dignity. During the Genocide against the Tutsi in Rwanda, Tutsis were referred to as ‘cockroaches’; the Nazis referred to Jews as ‘vermin’.*

*5. Organisation: Genocides are always planned. Regimes of hatred often train those who go on to carry out the destruction of a people.*

*6. Polarisation: Propaganda begins to be spread by hate groups. The Nazis used the newspaper Der Stürmer to spread and incite messages of hate about Jewish people.*

*7. Preparation: Perpetrators plan the genocide. They often use euphemisms such as the Nazis’ phrase ‘The Final Solution’ to cloak their intentions. They create fear of the victim group, building up armies and weapons.*

*8. Persecution: Victims are identified because of their ethnicity or religion and death lists are drawn up. People are sometimes segregated into ghettos, deported or starved and property is often expropriated. Genocidal massacres begin.*

*9. Extermination: The hate group murders their identified victims in a deliberate and systematic campaign of violence. Millions of lives have been destroyed or changed beyond recognition through genocide.*

*10.Denial: The perpetrators or later generations deny the existence of any crime.*

இவற்றுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய சர்வதேசம் தொடர்ந்தும் கள்ள மௌனம் காத்தும், இலங்கைத்தீவில் நடைபெற்றது ஒரு உள் நாட்டுப்போர் என்றும் வலிந்து காணமல் ஆக்கப்படவர்களைக் கண்டறிதல் இலங்கைக்குள்ளேயே நிறுவப்பட வேண்டும் என்ற நிலைப்பாடும் சர்வதேச மட்டத்தில் நிலவி வருகின்றது. ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு Terrorist Investigation Division (TID), எந்தவித ஆதாரங்களுமற்று வெறுமனே சந்தேகத்தின் பெயரில் யாரையும் காலவரையறையற்று வெளித்தொடர்புகளற்று தடுத்து வைத்திருக்க முடியும் போன்ற மானிடத்திற்கெதிரான சட்டத்தினைக் கொண்டியங்கும் பிரிவுகளை வைத்திருக்கும் ஸ்ரீ லங்கா அரசு, துணை இராணுவக்குழுக்களின் உதவியுடன் பெயர்த்தகடற்ற வெள்ளை வான்கள், 2009 ற்குப் பின்னர் கிறிஸ் பூதம் போன்ற மிகவும் மலிவான செயல்கள் மூலம் சமூக அடக்குமுறைகளையும் பேரினவாத பௌத்த சிங்கள அரசு ஈழத்தமிழர்மேல் தொடர்ந்தும் தொடுத்து வருகின்றது.

காலம்சென்ற மன்னார் ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்கள் 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட இன அழிப்புப் போரின் போது 46 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் இருப்பதாகச் ஸ்ரீலங்கா அரசின் பதிவுகளை ஆதாரம் காட்டிப் புள்ளிவிபரம் ஊடாக வெளிப்படுத்தி இருந்தார். 2009 போர்ச்சூழலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அப்பால் 1980 களிலிருந்து தொடர்ச்சியாக ஈழத்தமிழ் மக்கள் குறிப்பாக இளந்தலைமுறையினர் குறிவைக்கப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நிகழ்வுகள் கட்டம் கட்டமாக நடைபெற்றிருக்கின்றது. இது சனத்தொகையின் அடிப்படையில் உலகிலேயே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அதிகமானோர் ஈழத்தமிழர்களாகவே உள்ளனர்.

இவை வெறுமனே போரின்போது இடம்பெற்ற ஆட்கடத்தல்கள் மட்டுமல்ல, இவை அனைத்தும் இனஅழிப்பு நோக்கில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் நிகழும் நிகழ்வுகளே. வலிந்து காணாமல் ஆக்கப்படுபவர்களில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்




# உலகம் முடக்கும் அடுத்த கட்டத்துக்கு தயாராகும் ஹூதீஸ் அமைப்பு

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

இரண்டு மாதங்களாக தொடரும் அமெரிக்க மற்றும் பிரித்தானியா நாடுகளின் வான் தாக்குதல்களுக்கு பின்னரும் ஏமனின் ஹூதீஸ் அமைப்பினரின் தாக்குதல் வலிமை குறைய வில்லை என்பதை அண்மைய தாக்குதல்கள் எடுத்துக்காட்டியுள்ளது.



பிரித்தானியாவின் றுபிமார் என்ற சரக்கு கப்பலை மூழ்கடித்ததுடன் அமெரிக்காவின் 33 மில்லியன் டொலர்கள் பெறுமதியான எம்கியூ-9 என்ற ஆளில்லாத நவீன தாக்குதல் மற்றும் உளவு விமானத்தையும் சுட்டுவீழ்த்தியுள்ளனர்.

காசா பகுதி மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் ஆரம்பமாகிய பின்னர் வீழ்ந்த இரண்டாவது எம்.கியூ-9 விமானம் இதுவாகும். கடந்த சில வாரங்களாக அமெரிக்க மற்றும் பிரித்தானியாவின் பல கப்பல்களையும் அவர்கள் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர். இந்த தாக்குதல்கள் தொடர்கின்றபோதும், ஹூதீஸ் அமைப்பினர் தற்போது தமது தாக்குதல் உத்தியை வேறு பக்கம் திருப்பியுள்ளனர்.

பாப் எல் மன்டீப் நீரிணையில் கடலுக்கு அடியில் செல்லும் தொலைதொடர்பு வயர்களை தாக்கி அழிக்கும் நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். பாராசீக வளைகுடா, மத்திய தரைக் கடல், செங்கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளில் கடலுக்கு அடியால் செல்லும் தொலைதொடர்பு வயர்கள் தொடர்பான வரை படத்தை கடந்த டிசம்பர் மாதம் தமது ரெலிகிராம் சனலில் ஹூதீஸ் அமைப்பினர் வெளியிட்டிருந்தனர். அந்த வரைபடத்துடன் அவர்கள் ஒரு தகவலையும் வெளியிட்டிருந்தனர். அதாவது உலகின் பல பாகங்களுக்கும் செல்லும் தொலைதொடர்பு வயர்களை கட்டுப்படுத்தும் புள்ளியில் தமது நாடு உள்ளது எனவே அதனை தாக்கிஅழிக்கும் சக்தி தம்மிடம் உள்ளது என்பது தான் அந்த செய்தி.

கடந்த ஒக்டோபர் மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து ஹூதீஸ் அமைப்பினர் 100 இற்கு மேற்பட்ட ஏவுகணை மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். அதனால் பல வர்த்தக கப்பல்கள் சேதடைந்ததுடன், கலக்ஸி லீடர் என்ற கப்பலையும் கடத்திச்சென்றுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற தாக்குதலில் பிரித்தானியாவின் றுபிமார் என்ற கப்பல் கடலில் மூழ்கியுள்ளது. ஏடன் வளைகுடாவை செங்கடலுடன் இணைக்கும் பப் எல் மண்டீப் என்ற நீரிணைப் பகுதியில் தான் அதிக தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.



இந்த தாக்குதல்களை தொடர்ந்து பல கப்பல் நிறுவனங்கள் அந்த பகுதி ஊடான போக்குவரத்தை நிறுத்தியுள்ளன. அதில் மார்ஸ்க் என்ற மிகப்பெரும் கப்பல் நிறுவனமும் அடங்கும். அந்த கப்பல்கள் தற்போது ஆபிரிக்காவை சுற்றியே செல்கின்றன. அதனால் கப்பல் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கட்டணம் என்பன மிக மிக அதிகம். அது உலகளாவிய ரீதியில் பொருட்களின் விலைகளை கடுமையாக அதிகரித்துள்ளது. அமெரிக்கா தலைமையிலான சில நாடுகள் கூட்டணியை அமைத்து இந்த தாக்குதல்களை நிறுத்த முற்பட்டாலும் அது அதிக பலனைக் கொடுக்கவில்லை.

காசாவில் இஸ்ரேல் போரை நிறுத்தும் வரையில் தாக்குதல்கள் தொடரும் என ஹூதீஸ் அமைப்பு தெரிவித்துவருகின்றது. காசா மீதான இஸ்ரேலின் போர் மத்தியகிழக்கில் புதிய பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

ஆனால் தற்போது தோன்றியுள்ள புதிய நெருக்கடி என்பது கடலுக்கு அடியால் செல்லும் தொலைதொடர்பு வயர்களின் பாதுகாப்பு தொடர்பானது. லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லாக்களும், ஈராக்கில் உள்ள எதிர்ப்பு படையினரும் தாமும் கடலுக்கு அடியால் செல்லும் வயர்களை தாக்கப்போவதாக தெரிவித்துள்ளனர்.



இது இந்த போரை வேறு ஒரு பரிணாமத்துக்குள் இட்டுச்செல்லவுள்ளது. மத்தியகிழக்கில் உள்ள நாடுகளும் உலகில் உள்ள நாடுகளும் கடலடி வயர்களின் தொலைதொடர்பு பொறிமுறையால் பல நன்மைகளை பெற்றுவருகின்றனர். இந்த 21 ஆவது நூற்றாண்டில் தகவல் பரிமாற்றத்தில் இந்த வயர்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. 95 விகிதமான மிக முக்கிய தகவல்கள் இந்த வயர்களின் மூலம் தான் பகிரப்படுகின்றன. தினமும் 10 றில்லியன் டொலர்கள் பெறுமதியான பணப்பரிமாற்றமும் இந்த வயர்களினால் தான் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வயர்கள் பகுதியாக சேதமடைந்தாலே பல நாடுகளின் இணையத்தளங்கள் முடங்கிப் போகும் நிலை ஏற்படலாம். அதனால் முழு நாடுகளிலும் மிகப்பெரும் பொருளாதார தடங்கல்கள் ஏற்படும். அதிலும் முக்கியமாக அமெரிக்காவின் கூட்டணி நாடுகளான வளைகுடா நாடுகளின் பொருளாதாரம் முற்றாக சீரழியலாம்.

இந்த வயர்களின் சேதம் படைத்துறை மற்றும் அரசுகளின் தொடர்பாடல்களையும் இடைநிறுத்தலாம். வயர்கள் ரெறாபைற் அளவுடைய உணர்திறன்மிக்க படைத்துறை தகவல்களை கடத்தவல்லவை. தற்போது இடம்பெறும் படைநடவடிக்கைக்கான தகவல்களும் இந்த வயர்கள் மூலமாகத்தான் செல்கின்றன. எதிர்காலத்தில் செயற்கைநுண்ணறிவு வளர்ச்சிகாணும்போது மேலும் அதிக தகவல்பரிமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைகள் ஏற்படலாம்.

இந்த வயர்கள் செல்லும் மிக முக்கிய புள்ளியில் ஏமன் அமர்ந்துள்ளது. உலகின் தொடர்பாடல்களுக்கான வலையமைப்புக்களில் மூன்றில் ஒரு பகுதி செல்லும் இடத்தில் ஏமான் நாடு உள்ளது. இது உலகின் சக்திவாய்ந்த நாடுகளான சீனா மற்றும் அமெரிக்காவுக்கு மிக அச்சுறுத்தலான விடயமாகும். வயர்கள் மூல மான வலையமைப்பை கட்டுப்படுத்துவதில் இந்த இரு நாடுகளுக்கும் ஏற்கனவே கடும் போட்டி நிலவுகின்றது.

இந்த வயர்களை இலகுவில் தாக்கமுடியுமா என்ற கேள்விகளும் உள்ளன. அதாவது பாதுகாப்பு காரணங்களுக்காக கடலுக்கு அடியில் மிக ஆழமான பகுதியிலேயே வயர்கள் புதைக்கப்படுகின்றன. ஹூதீஸ் அமைப்பினர் இதுவரைகாலமும் ஏமன் அரசுடனும் அதற்கு ஆதரவான அமெரிக்கா, சவுதிஆரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் தரைவழியிலான மோதல்களில் தான் ஈடுபட்டுவந்துள்ளனர்.

ஆழ்கடலில் சென்று தாக்குதல் நடத்தும் பொறிமுறை இதுவரையில் அவர்களிடம் இல்லை. அதாவது மிக நவீன கடற்படையும் அவர்களிடம் இல்லை. எனினும் கடலின் மேற்பரப்பால்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மத்திய கிழக்கின் அமைதிக்கு அவசியமான ஒரு ஒப்பந்தத்தை முறிக்கும் தறுவாயில் இஸ்ரேல்

பகுதி –1

தமிழில்: ஜெயந்திரன்

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மூர்க்கத்தனமான தாக்குதல்களின் காரணமாக, எகிப்தின் எல்லைக்கு மிக அருகில் உள்ள நகரமான றாவா (Rafah) நகரத்தில், தஞ்சடைந்திருக்கின்ற பாலஸ்தீன மக்களை அந்த நகரத்தில் இருந்து வெளியேற்றி, அங்கே நிலைகொண்டிருக்கின்ற ஹமாசின் படைகளை முற்றாக அழிப்பது தொடர்பாக, இஸ்ரேல் பிரதம மந்திரி பெஞ்சமின் நெத்தன்யாகு அண்மையில் வெளியிட்ட கருத்து எகிப்திய ஆட்சியாள ரைச் சினமூட்டியிருக் கிறது.

உண்மையில், இஸ்ரேலின் தற்போதைய இராணுவ முன்னெடுப்புகள் கெய்றோவுக்கும் ரெல்அவிவுக்கும் இடையே ஒப்பமிடப்பட்ட "காம்ப் டேவிட் ஒப்பந்தம்" (Camp Dvid Accords) மீறப்படும் ஆபத்தைத் தோற்றுவித் திருக்கிறது. 1979ம் ஆண்டில் கைச்சாத் திடப்பட்ட இந்த ஒப்பந்தத்துக்கு, முதல் தடவை யாக தற்போது ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

### மக்களை அங்கிருந்து வெளியேற்றும் திட்டம்

காஸாவின் ஏனைய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து, தற்போது றாவாவில் தஞ்சமடைந் திருக்கின்றன 1.5 மில்லியன் எண்ணிக்கையைக் கொண்ட பாலஸ்தீன மக்களை, அங்கிருந்து வெளியேற்றுவதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டு மாறு பெப்பிரவரி மாதம் 9ம் திகதி, நெத்தன்யாகு தனது இராணுவத்துக்குக் கட்டளை யிட்டிருந்தார்.



"றாவாவில் நான்கு பட்டாலியன்கள் ஹமாஸ் போராளிகளை விட்டுவிட்டு ஹமாசை நாங்கள் அழிக்க முடியாது" என்று நெத்தன்யாகுவின் பணிமனையால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு ஒன்று கூறுகிறது.

"எகிப்துக்கும், காஸாவுக்கும் இடை யேயுள்ள எல்லையில் அமைந்திருக்கின்ற றாவா நகரம் மீது இஸ்ரேல் பாதுகாப்புப் படை, ஒரு தரைத்தாக்குதலை முன்னெடுக்குமாக இருந்தால், இருநாடுகளுக்கும் இடையே 1979 இல் வரையப்பட்ட அமைதி ஒப்பந்தத்தை தாம் இரத்துச்செய்வோம் என்று எகிப்து அச் சுறுத்தலை விடுத்திருக்கிறது" என்று நெத்தன் யாகு மேற்குறிப்பிட்ட கருத்தைத் தெரி வித்ததைத் தொடர்ந்து, இஸ்ரேலின் அரச ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் செய்தி வெளியிட்டி ருந்தது. இவ்விடயம் தொடர்பாக, எகிப்திய அரசின் கருத்து இன்னும் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை. ஆனால் அவ்வாறான ஒரு தரைத்தாக்குதல் காம்ப் டேவிட் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை அப்பட்ட மாக மீறுவதாகவே அமையும் என்று நம்பப் படுகிறது.

### இஸ்ரேலுடன் அமைதியை ஏற்படுத்துதல்

ஜூத மக்களின் தேசமான இஸ்ரேலை, கடுமையாக எதிர்த்து வந்த எகிப்து நாடு தான், இஸ்ரேல் அரசுடன் ,உறவுகளை முதலில் சீர்ப்படுத்திய அரபு நாடு ஆகும். காம்ப் டேவிட் ஒப்பந்தம் ஒப்பமிடப்படுதவற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர், காட்டூம் தீர்மானம் (Khartoum Resolution) என்று அழைக்கப்படுகின்ற தீர்மானத்தில் ஒப்பமிட்ட எட்டு நாடுகளில் எகிப்தும் ஒன்றாகும். (காட்டூம் தீர்மானம்: இஸ்ரேலுடன் சமாதானம் இல்லை, இஸ்ரேலுக்கு அங்கீகாரம் இல்லை, இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகள் இல்லை).

1967ம் ஆண்டு, ஜூன் மாதம் 5ம் திகதி யிலிருந்து 10ம் திகதி வரை நடைபெற்ற 6 நாள் யுத்தத்துக்குச் சில நாட்களுக்குப் பின்னர், சூடான், காட்டூம் நகரில் நிகழ்ந்த அரபுலீக்கின் உச்சிமாநாட்டில் இச்சுலோகங்கள் வெளிவந்தன. எகிப்து, சிரியா, ஜோர்தான், ஈராக், அல்ஜீரியா ஆகிய 5 நாடுகளின் இராணுவங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த தாக்குதலை இஸ்ரேல் மிக விரைவாக முறியடித்திருந்தது. அத்தாக்குதல் முறியடிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட விளைவுகள் அரபு நாடுகளுக்கு மிகவும் மோசமானவையாக அமைந்திருந்தன. சீனாய் தீபகற்பம், எகிப்திலிருந்த காஸாத்துண்டு, கிழக்கு ஜெரூசலம் உள்ளிட்ட ஜோர்தானின் மேற்குக்கரை, சிரியாவின் கோலான் குன்றுகள் போன்றவற்றை அவ்வேளையில் இஸ்ரேல் கைப்பற்றியிருந்தது.

### யொம் கிப்பூர் யுத்தம் (Yom Kippur war)

1970ம் ஆண்டு, அன்வர் எல்-சதாத் எகிப்தின் அதிபராகிய பொழுது, எகிப்திய முன்னைய அதிபர் கமால் அப்டெனல் நாஸர் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையை அவர் முற்றாக மாற்றியமைத்தார். எகிப்துக்கும் சிரியாவுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த அரசியல் கூட்டிணைப்பைக் கலைத்ததுடன், சோவியத் ஒன்றியத்திடமிருந்து இராணுவ உதவிகளைப் பெறுவதை நிறுத்தி, தமக்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்காவை நோக்கித் திரும்பினார்.

1973 இல், சீனாய் தீபகற்பத்தை மீளவும் கைப்பற்றும் நோக்கத்துடன், யொம் கிப்பூர் யுத்தத்தை எல்-சதாத் தொடங்கினார். ஆனால் அந்த முயற்சி கடும் தோல்வியில் முடிந்ததன் காரணமாக, அமெரிக்காவை இன்னும் நெருங்கிச்செல்ல வேண்டிய தேவை சதாத்துக்கு ஏற்பட்டதுடன் இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தார்.

எல்-சதாத் ஓர் ஆக்கபூர்வமான அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதில் ஆர்வ மாக இருந்தார். 1977ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இஸ்ரேல் அரசின் அழைப்பை ஏற்று, ஜெரூசலமுக்கு ஓர் உத்தியோகபூர்வமான பய ணத்தை மேற்கொண்ட சதாத், இஸ்ரேலின் நாடாளுமன்றமான கெனேசெத்தில் (Knesset) உரையாற்றியது மட்டுமன்றி, இஸ்ரேல் தேசத்தின் இருப்பை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தார். அதற்குப் பின் என்ன நடந்தது என்றால் அரபுலகத்தில் மிகவும் பலமான இராணுவத்தை அப்போது கொண்டிருந்த எகிப்து, காட்டூம் தீர்மானத்திலிருந்து வெளியேறும் முதல் நாடாக மாறியது.

### காம்ப் டேவிட் ஒப்பந்தங்கள்

எகிப்திய அதிபரான எல்-சதாத்துக்கும் இஸ்ரேலிய பிரதமரான மெனாச்செம் பெகினுக்கும் இடையே யான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு கள், 1978 செப்ரெம்பரில் வோஷிங்டன் டி.சி.யில் அமைந்துள்ள அமெரிக்க அதிபரின் காம்ப் டேவிட் வதிவிடத்தில் நடைபெற்றன. அப்போதைய அமெரிக்க அதிபரான ஜிம்மி காட்டரின் (Jimmy Carter) தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகள், எகிப்து, இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளும் அருகருகே சமாதானமாக வாழ்வதை நோக்காகக் கொண்ட இரண்டு ஆவணங்கள் அப்போது ஒப்பமிடப்பட்டன.

ஆறு மாதங்களின் பின்னர், அதாவது 1979, மார்ச் 26ம் திகதி, எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான அமைதி ஒப்பந்தத்தில், எல்-சதாத்தும் பெகினும் கைச்சாத்திட்டு, இரண்டு நாடு களுக்கும் இடையே இடம்பெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டுவந்து, இராஜீக மற்றும் பொருண்மிய உறவுகளை ஆரம்பித்து வைத்தார்கள்.



காம்ப் டேவிட் ஒப்பந்தங்களின் படி, சீனாய் தீபகற்பத்தின் கட்டுப் பாட்டை மீண்டும் எகிப்து தனக்குக் கீழே கொண்டு வந்தது. ஆனால், பெரும்பாலான அரபு நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வில்லை.

அரபு நாடுகளின் ஒற்றுமைக்கு மேலாக, எகிப்தின் நலன்களை மட்டும் முன்னிறுத்திய எல்-சதாத், தனக்கு முதல் எகிப்தின் அதிபராக இருந்த நாஸரின் கொள்கைகளுக்குத் துரோகம் இழைத்து விட்டதாக முஸ்லிம் நாடுகள் பொதுவாகக் கருதின.

ஆனால், சதாத்தோ தான் அடைந்து கொண்ட வெற்றிகள் தொடர்பான பெருமிதமான உணர்வைக் கொண்டிருந்ததுடன், "ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் அமைதியை ஏற் படுத்தி, இழந்த பிரதேசங்களை தான் மீண்டும் கையகப்படுத்தியதாகக்" கூறிவந்தார். ஆனால் இஸ்ரேலுடன் அமைதியை ஏற்படுத்தியது தொடர் பாக, எகிப்தில் உள்ள இஸ்லாமியக் குழுக்கள் அவரை மன்னிக்கவில்லை. 1981ம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 6ம் திகதி, அதிபர் சதாத் ஒரு வெற்றி அணிவகுப்பில் கலந்துகொண்ட போது, எகிப்திய இஸ்லாமிய ஜிகாத் மற்றும் அல்-கமா அல்-இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவினர் மேற்கொண்ட சூழ்ச்சியால் கொல்லப்பட்டார்.

### அமைதி ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள்

'சீனாய் தீபகற்பப் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் முற்றாக வெளியேற வேண்டும்' என்று காம்ப் டேவிட் ஒப்பந்தங்கள் மிகவும் தெளிவாகக் கூறியது மட்டுமன்றி, அந்தப் பிரதேசத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து, அங்கு மேற்கொள்ளப் படும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தன.

வலயம் A, இடமிருந்து வலமாக விரிகிறது. அதாவது சூயஸ் வளைகுடாவின் கிழக்குக் கரை யில் இருந்து A என்று பெயிரிடப்பட்ட கோடு வரை விரிகிறது. இந்த வலயத்தில் மொத்தம் 22000 துருப்புகளைக் கொண்ட ஒரு இயந்திர மயமாக்கப்பட்ட காலாட்படைப் பிரிவை வைத்திருப்பதற்கு எகிப்துக்கு அனுமதி உண்டு.

வலயம் B: A என்ற கோட்டுக்கும் B என்ற கோட்டுக்கும் இடையே இந்த வலயம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## உரிமைகளுக்கு... தொடர்ச்சி ...

அதிகரித்த. உற்பத்தி செலவு மற்றும் நிர்வாக செலவுகள், தேயிலை விலை வீழ்ச்சி போன்ற இன்னோரன்ன விடயங்களை காரணங்காட்டி தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தினை பெற்றுக் கொடுப்பதில் கம்பனிகள் இழுத்தடிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. இதனால் மாற்றுத் தொழில் வாய்ப்பின்றி தேயிலைத் தொழிற்றுறையை மட்டுமே நம்பி வாழும் தொழிலாளர்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி வரும் நிலையில் பொருளாதார பின்னடைவானது ஏனைய துறைகளிலும் தாக்கம் செலுத்தி வருகின்றது. எனவே தொழிலாளர்களுக்கு எதிரான உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

### தனித் தேசிய இனம்

வருடாந்தம் ஆயிரக்கணக்கான மலையக இளைஞர்கள் பாடசாலையை விட்டு வெளியேறி வரும் நிலையில் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்து தொழிற்றிறன் மிக்க தொழிலாளர்களாக இவ்விளைஞர்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இதேவேளை அரசதுறை தொழில் வாய்ப்புக்களிலும் மலையகத்தவர்களை ஈடுபடச்செய்வதற்கான அடித்தளத்தை இடுதலும் அவசியமானதாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் தொழிலில் இருந்தும் இளைப்பாறிய பின்னர் ஒய்வூதியத்தை பெற்றுக் கொள்வதில் இழுபறி நிலைமைகள் காணப்படுகின்றன. ஜனவசம, அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பிளான்டேஷன் கம்பனி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 7000 - 10,000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்ட ரீதியான கொடுப்பனவுகளான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைகாலப்பணம் என்பன நீண்டகாலமாக வழங்கப்படாதிருப்பதாக கடந்தகால அறிக்கை யொன்று வலியுறுத்துகின்றது. இவ்வாறாக இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்தத்தொகை 1800 மில்லியனுக் கும் அதிகமாகும் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இது குறித்து அரசியல் தொழிற்சங்கவாதிகள் கவனம் செலுத்தி அவற்றை உரியவாறு பெற்றுக்கொடுக்க ஆவண செய்தல் வேண்டும்.

மலையக மக்களின் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன கனவாகி வருகின்றன. இவற்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் தொடர்ச்சியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றபோதும் இது இன்னும் சாத்தியமாகாத நிலையில் ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி வருகின்றனர். இதேவேளை மலையக மக்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோஷங்கள் வலுப்பெற்று வருகின்றன. இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் குடியேறி 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் உரிமைகள் இழந்த சமூகமாகவே வாழ்ந்து வருகின்றனர். இன்றுவரை வாக்குரிமையை மட்டுமே கொடுத்து ஓரங்கட்டப்பட்டுள்ள மலையக சமூகம் இனியாவது தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 'கித்சர' அமைப் பும் அண்மையில் வலியுறுத்தி இருந்தது.

பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் புதிய வடிவத்துடன் அதிகரித்து வரும் நிலையில் இவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளவும் இம்மக்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவும் தொழிற்சங்கபலம் மிகவும் இன்றியமையாததாகும். இப்பலத்தின் ஊடாக சாதக விளைவுகளுக்கு வித்திட முடியும். இந்நிலையில் தெற்காசியாவில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் ஒருமித்த நோக்கோடு புத்தாக்க செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் அண்மையில் புதுடில்லியில் இடம்பெற்ற தெற்காசிய தொழிற்சங்க கருத்தரங்கில் கலந்துகொண்டு வலியுறுத்தியமை முக்கியமாக நோக்கப்பட வேண்டியதாகும். அத்தோடு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 200 வருடங்களாக கடந்து வந்தபாதையில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானிகளிடம் எடுத்துரைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

• • •

## உலகை முடக்க ... தொடர்ச்சி ...

செல்லும் கப்பல்களை தாக்கும் ஏவுகணைகள் மற்றும் அதிவேகத் தாக்குதல் படகுகள் அவர்களிடம் உண்டு.

ஆனால் வயர்களை அழிப்பதற்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் தேவை. பப் எல் மண்டீப் பகுதி நீரிணையின் சராசரி ஆழம் 200 மீற்றர்கள் ஆகும், சில இடங்களில் அது 300 மீற்றர் வரையிலும் செல்லும். எனினும் சில வயர்களை அவர்களிடம் உள்ள தொழில்நுட்பத்தால் எட்டமுடியும். ஆழம்குறைந்த கடற்பகுதியில் உள்ள வயர்களை அழிக்க முடியும். ஏடன் வளைகுடாவில் சில பகுதிகளில் 100 மீற்றர் ஆழத்திலும் வயர்கள் செல்கின்றன.

2013 ஆம் ஆண்டு அலக்சாட்டிரா துறைமுகப்பகுதியில் எகிப்துக்கும் - ஐரோப்பாவுக்கும் இடையில் கடலுக்கடியால் செல்லும் வயர்களை அழிக்க முயன்ற மூவரை எகிப்தியப் படையினர் கைதுசெய்திருந்தனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயிற்சிகளோ அல்லது உயர் தொழில்நுட்ப கருவிகளோ தேவையில்லை. தற்போது சுழியோடகளுக்கான பயிற்சிகளை ஹூதீஸ் அமைப்பினர் தமது படையினருக்கு வழங்கி வருகின்றனர். அவர்களின் மூலம் கடல் கண்ணிவெடிகளை கொண்டு இந்த வயர்களை தகர்க்கமுடியும்.

இத்தகைய இலக்குகள் மென்மையான இலக்குகள். கடலுக்கடியால் செல்லும் வயர்களை பாதுகாப்பது என்பதும் நாடுகளால் இயலாத காரியம். அதேசமயம் சவுதிஅரேபியாவுக்கும் டிபோதி பகுதிக்கும் இடையிலான நான்கு வயர்களை ஹூதீஸ் அமைப்பினர் சேதப்படுத்தியுள்ளதாக பிரித்தானியாவின் ஸ்கை மற்றும் இஸ்ரேலின் ஜெருசலம் போஸ்ட் ஆகிய ஊடகங்கள் கடந்த 26 ஆம் நாள் தெரிவித்துள்ளன. இந்த தாக்குதலுக்கு ஈரான் உதவிகளை வழங்கியதாகவும், தாக்குதலில் எகிப்தின் ஊடாக கிழக்கு ஆசியாவை ஐரோப்பாவுடன் இணைக்கும் ஏ.ஏ.ஈ-1, பாகிஸ்தான் மற்றும் கட்டார் ஊடாக சீனாவை மேற்குடன் இணைக்கும் ஈ.ஐ.ஜி, இந்தியாவை ஐரோப்பாவுடன் இணைக்கும் ரி.ஜி. என் மற்றும் ஐரோப்பா, ஆபிரிக்கா, இந்தியாவை இணைக்கும் சீகொம் (இது இந்தியாவின் டாடா நிறுவனத்துக்கும் சொந்தமானது) ஆகிய நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டது இந்தியா எனவும் இஸ்ரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளன. திருத்தப் பணிகளுக்கு எட்டு வாரங்கள் எடுக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலை தொடர்ந்தால் உலகம் மிகப்பெரும் பொருளாதார வீழச்சியை காணும் என்பதை வல்லரசுகள் நன்கு உணரும் எனவே தற்போது அதற்கான மாற்றுவழியை தேடவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

• • •

## மத்திய கிழக்கின்... தொடர்ச்சி ...

இருக்கிறது. மென்மையான ஆயுதங்களையும், வாகனங்களையும் கொண்ட நான்கு எகிப்திய பட்டாலியன்கள் இப்பிரதேசத்தில் நிலைகொள்ள முடியும். பொதுமக்களின் காவல்துறைக்கு உதவுவது இந்த துருப்புகளின் பணியாகும்.

வலயம் C: B என பெயரிடப்பட்ட கோட்டிலிருந்து மேற்காக தேசிய எல்லை வரைக்கும் மற்றும் கிழக்குப் புறமாக அக்பா வளைகுடா வரையும் நீள்கிறது. மென்மையான ஆயுதங்கள் தரித்த பன்னாட்டு ஐக்கிய நாடுகள் படைகளும் எகிப்திய சிவிலியன் காவல்துறையினர் மட்டும் இப்பிரதேசத்தில் நிலைகொள்ள முடியும்.

வலயம் D: தேசிய எல்லைக்கும், மேற்கில் D எனக் குறியிடப்பட்டிருக்கம் கோட்டுக்கும் இடையே அமைந்திருக்கிறது. இராணுவ உபகரணங்களையும், பாதுகாப்பு அரண்களையும் கொண்ட நான்கு காலாட்படை பற்றாலியன்கள் இந்தப் பிரதேசத்தில் நிலைகொள்ள முடியும். அத்துடன் ஐக்கிய நாடுகளின் கண்காணிப்புப் படைவீரர்களும் இங்கு நிலைநிறுத்தப்படமுடியும்.

1979ம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்ட காலத்திலிருந்து, வலயம் A, வலயம் B ஆகிய பிரதேசங்களில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், C மற்றும் D தொடர்பான விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

### மாற்றங்களும் திருத்தங்களும்

2005 இல், காஸாத்துண்டில் இருந்து இஸ்ரேல் தனது துருப்புக்களை மீள அழைத்து அங்குள்ள இஸ்ரேலிய மக்களின் குடியிருப்புகளையும் அகற்றியது. அந்த நேரத்தில், பிலடெல்வி உடன்பாட்டில் இரு தரப்பும் ஒப்பமிட்டது. 1979க்குப் பின்னர் முதல் தடவையாக றாவா நகரத்தின் எகிப்திய எல்லையின் D பிரதேசத்தில், 'குறிப்பாக பிலடெல்பி' பாதை என அழைக்கப்பட்ட 14 கிலோ மீற்றர் நீளமான ஒரு நிலத்துண்டில் மென்மையான ஆயுதங்கள் தரித்த எல்லைக்காவற் படையை வைத்திருக்க எகிப்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும் இந்த உடன்பாடு 1979ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு திருத்தம் அல்ல. 2007ம் ஆண்டு ஹமாஸ் அதிகாரத்துக்கு வரும் வரை பாலஸ்தீனப் பகுதி, பாலஸ்தீன அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அந்த றாவாக் கடவை (Rafah Crossing) பாலஸ்தீன அதிகாரத்தாலும் எகிப்தாலும் இணைந்த விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அந்தப் பாதையை பொதுமக்கள் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. காஸாவுக்கு விவசாய உற்பத்திகளை வழங்குவதற்காகவே இந்தப்பாதை முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் ஹமாஸ் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், எகிப்தும் இஸ்ரேலும் காஸாவுடனான தங்கள் எல்லைப்பகுதியை மூடிவிட்டன.

றாவா பிரதேசத்தில், தனது இராணுவப் பிரசன்னத்தை அதிகரிக்க வழிசமைக்கும் திருத்தம் ஒன்றை 2021 நவம்பரில், மேற்கொள்ள எகிப்தும் இஸ்ரேலும் உடன்பாட்டை எட்டின. அந்தக் காலப்பகுதியில் வட சீனாய்ப் பகுதியில் பயங்கரவாதக் குழுக்களை எதிர்த்து எகிப்து போராடிக்கொண்டிருந்தது. எவ்வாறிருப்பினும், அதற்குள் அனுமதிக்கப்பட்ட எகிப்திய இராணுவத் துருப்புகளதும் மற்றும் இராணுவ உபகரணங்களினதும் உண்மையான எண்ணிக்கை வெளியிடப்படவில்லை.

**தொடரும்**

**நன்றி: www.rt.com**

## "ஊழி" ... தொடர்ச்சி ...

பெருமளவானவர்கள் 13 ற்கும் 35 வயதிற்கும் உட்பட்ட ஆண்களாகவே இருக்கின்றனர். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதினால் தமிழ் மக்களின் இனப்பெருக்கம் தடுக்கப்பட்ட வேண்டும் என்ற நோக்கமும் இதற்குப்பினால் இருந்திருக்கிறது. ஏனென் றால் காணாமல் ஆக்கப்படுவதற்குப் பதிலாக பயங்கவாதத் தடைச்சட்டம் மூலம் இவர்களை நீண்டகாலம் சிறையில் வைத்திருந்து தடுத்திருக்கலாம். மாறாக நிரந்தரமாக தமிழர் வாழ்விலிருந்து அகற்றிவிட வேண்டும் என்பது திட்டமிட்டு நடைபெற்றுவருவது புலப்படுகின்றது.

குறிப்பாகச் சந்திரிக்கா அம்மையார் காலத்திலில் நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதென்பது தமிழர் தாயகத்தில் வெளியில் இருந்தவர்களும் காணாமல் ஆக் கப்பட்டனர். இலக்கத்தகடற்ற வெள்ளை வான் களில் தமிழர்கள் எழுந்தமானமாகக் கடத்திச் செல்லப்பட்டனர், இவை அனைத்தையும் துணை இராணுவக் குழுக்கள் ஊடாக சட்டத் துக்கு அப்பாற்பட்டும். மனித உரிமை மீறல் களில் தம்மை மாட்டிக்கொள்ளாமலும் செய்து வந்தனர்.

ஜெனவாவில், உலகில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், 2010 டிசம்பரில் திறந்து வைக்கப்பட்ட போதிலும், 2016 இலேயே ஸ்ரீலங்கா அரசு அதில் உடன்படிக்கை இடுகின்றது. ஆகவே, அவ் அலு வலகத்தின் கூற்றின் படி உலகில் 2010 ற்குப் பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடையங்களே அவர்களினால் கையாளப்படும். ஈழத்தமிழரைப்பொறுத்தவரை அவ் உடன்படிக் கையில் ஸ்ரீலங்கா அரசு கைச்சாத்திடப்பட்ட 2016 மே மாதத்திற்குப் பின்னர் நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடையங்கள் மட்டுமே அவ் அலுவலகங்த்தினால் பரிசீலிக்கப் படும்.

இங்குதான், இச் சர்வதேசம் எவ்வாறு யூகோசிலாவியா, ருகாண்டா போன்ற நாடுகளில் நடைபெற்ற இன அழிப்பு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கென ஏலவே இருக்கும் பொறிமுறைகளை விடுத்துச் சிறப்புப் பொறிமுறைகளைக் கொண்டுவந்து குற்றமிழைத்தவர்களைத் தண்டனைக்கு உட் படுத்தினார்காளோ அவ்வாறு ஈழத்தமிழர் விடையத்திலும் சிறப்புப் பொறிமுறைகள் போடப்பட வேண்டும் என்பதை ஈழத்தமிழர்கள் நாம் தொடர்ந்தும் ஒருமித்தும் வலியுறுத்த வேண்டும்.

நாம் இவ் அரசியல் நகர்விற்கு அரசியற் கட்சிகள் மட்டுமல்ல சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட அனைவரும் அவர் அவர் துறைகளில் தொடர்ந்தும் வலியுறித்த வேண்டும். ஈழத்தமிழருக்கு நடைபெற்றது இன அழிப்பு என்று சிறப்பான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான போராட் டங்களில் தமிழர் தரப்பு இன்னும் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். ஈழத்தமிழர் தொடர்ந்தும் தமக்கு நடைபெற்ற இன அழிப்பினை கலைப்படைப்புக்கள் ஊடாக வலியுறுத்த வேண்டியது ஈழத்தமிழராகிய அனைத்துப் படைப்பாளிகளின் தார்மீகக் கடமையாகும்.

மாறாக தணிக்கைக்குழுக்களுக்கும் அரசு களுக்கும் கட்டுண்டு படைப்புக்களைப் படைத் தால்தான் அவற்றை வெளியிற் கொண்டு வரலாம் என எண்ணும் முட்டாள்தனமான எண்ணங்களிலிருந்தும் எமது படைப்பாளிகள் விடுபட வேண்டும். கலைகள் பிறந்ததே அடக்கு முறைக்கும் அரசுகளுக்கும் எதிர்க் கிளர்ச்சி செய்பவர்களாலேயே, இதற்குச் சமீபத் திய உதாரணம் 2022 இல் ஜபார் பனாஹியின் (Jafar Panahi) இயக்கத்தில் வெளியாகிய "கரடிகள் இல்லை" (ஆங்கில மொழித் தலைப்பு: No Bears), 2021 இல் முகமது ரசூலோஃப் (Mohammad Rasoulof) இன் இயக்கத்தில் வெளியாகிய "There Is No Evil" போன்ற திரைப்படங்கள். இத் திரைப்பட இயக்குநர்கள் அரச ஒடுக்குமுறையை எதிர்த்து இத்திரைப்படங்களை இயக்கிச் சிறை சென்றார். இவை போன்று பல சர்வதேசத் திரைப்படங் களை இங்கு உதாரணமாகக் காட்ட முடியும்.

இது மட்டுமலாமல் தற்போதுள்ள தொழில்நுட்பப் புரட்சி நமக்குச் சாதகாமகவே உள்ளது, திரைப்படங்கள் மீண்டும் அரங்கு களுக்குள் (studios) சென்றுள்ளன, Extended Reality (XR) போன்ற தொழில்நுட்பங்களைப் பாவித்து ஈழத்துப் படைப்பாளிகளும் அரசுகளையும் அரச இயந்திரங்களையும் தாண்டிச்செல்லும் படைப் புகளை உருவாக்க வேண்டும்.

லூயிஸ் அடல்பெர்டோ பியூன்சோ (Luis Adalberto Puenzo) இன் நெறியாள்கையில் 1985 இல் வெளியாகி 58 வது ஒஸ்கார் விழாவில் சிறந்த வெளிநாட்டுத் திரைப்படம் உட்பட பல சர்வதேச விருதுகளை வென்ற அர்ஜென்டீனிய திரைப்படமாகிய "உத்தியோகபூர்வ கதை" (ஸ்பானிஷ் மொழித் தலைப்பு: La historia oficial, ஆங்கில மொழித் தலைப்பு: The Official Story) 16mm ஒளிப்பதிவுக் கமரா ஊடாக இரகசியமாகத் திரைப்படமாக்கப்பட்டது. இதில் வரலாற்று ஆசிரியையிடம் மாணவன் கொலையாளிகளே வரலாற்று பாடநூல்களை எழுதுகின்றார்கள் என்று வாதிடுவான். இவ்வாறு பல திரைப் படங்களை உலக சினிமாவிலிருந்து எடுத்துக் காட்டாகக் கூற முடியும். எமது அரசியற்கட்சிகள் பாராளுமன்ற அரசியலுக்குள் நிற்பதனால் இவற்றைச்சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்வதில் பெரிதும் நாட்டம் காட்டத்தவறி விட்டனர் என்றே கூறவேண்டும். எமது மக்கள் தொடர்ந்தும் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். இவற்றை நாம் கலைகளினூடு சர்வதேச மட்டத் துக்குக் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். ஸ்ரீலங்கா அரசாங்கம் இனிமேல் காணாமல் ஆக்கப்படுதல் நடைபெற்றால் சர்வதேச சட்டங் களுக்கு உடன்படுகின்றோம் என்று சொல்லும் அதேநேரம் ஜேவிபியின் கலவரத்தின் போது பல சிங்களவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர் எனவும் இவர்கள் இன அழிப்பு நோக்கில் காணாமல் ஆக்கப்படவில்லை என்றும். போரின் போது வெளிநாடுகளுக்கு தப்பி ஓடிய இராணுவத்தினரை அவர்கள் விடுதலைப் புலி களால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் கூறி அவற்றுக்கும் சேர்த்து நீதி கோரி ஈழத்தமிழர் மீது நடாத்தப்படும் திட்டமிட்ட இன அழிப்பை திசை திருப்பப் பார்ப்பதுடன், இவை அனைத்தும் போரின் ஒரு பக்கவிளைவுதான் என புதிய சர்வதேச சட்டத்துக்கு உடன்பட்டு கனதியை ஒதுக்கிவிடப்பார்க்கிறது.

இவ்வாறு வலிந்து காணாமல்போனவர் களைத் தேடும் போராட்டங்களை கனதியற்ற விடையமாக மாற்றும் வேலைகளை இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருக்கும் வேளையில் இவ்வாறான திரைப்படங்கள் வெளிவருவது வரவேற்கப்படக் கூடிய விடையமே.

**சில முக்கிய குறிப்புகள்:**

- ***சினம்கொள் 2009 இற்குப் பின்னர் ஈழத் திரையில் ஒரு புதிய பாய்ச்சலையும் அளவு கோலையும் உருவாகியுள்ளது.***
- ***சினம்கொள் பேசிய விடையம் slow death, இது கனதியான திரைப்படமாக வந்திருந்தது.***
- ***சினம்கொள் திரைப்படம் ஈழத்தமிழர் வர லாறில் ஒரு விடையத்துக்கு சாட்சியமக உள்ளது.***
- ***சினம்கொள் திரைப்படத்தினை இயக்கிய வரின் அடுத்த படைப்பே "ஊழி" திரைப்படம்.***
- ***"ஊழி" திரைப்படம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைப் பற்றியும் பின் முள்ளி வாய்க்கால் காலத்தில் தமிழீழத்தில் தொடர்ந் தும் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட பண் பாட்டு அழிப்பு போன்றவற்றையும் மைய மாகக் கொண்டுள்ளது.***
- ***உலகத்தின் பொறிக்குள் அகப்பட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் உறவினர்கள்.***
- ***வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் காலத்திலேயே பல பெற்றோர் உயிரிழந்துள்ளனர்.***
- ***இவ்வாறான கலைப்படைப்புக்கள் வெளிவர வேண்டும், அவற்றுக்கு ஈழத்தமிழர்கள் ஆதரவு வழங்க வேண்டும்.***
- ***இவ்வாறான படைப்புகள் வருவதன் மூலம், சர்வதேச மக்களின் மனச்சாட்சிகளைத் தட்ட முடியும்.***
- ***சனல் 4 வில் வெளியான ஆவணப்படம் சர்வதேசக் கவனத்தினை ஈர்த்தது.***
- ***இவ்வாறான கலைப்படைப்புக்கள் தொடர்ந் தும் மக்களை தாயகம் சார்ந்து செயற்பட வைக்கும்.***
- ***வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற் றோர் மற்றும் உறவினர்களுக்கான உளவியல் ரீதியான நடவடிக்கைகளை ஈழத்தமிழர்கள் மேற்கொள்ள வேண்டும்.***
- ***ஈழத்தமிழருக்கான தனித்துவமான திரைப் படத்துறையின் தேவையும் அவசியமும்.***
- ***ஈழத்தமிழருக்கான தனித்துவமான விநியோ கக் கட்டமைப்பின் (ஈழக்காண்பி / Eelamplay) தேவையும் அவசியமும்.***

• • •

## தொல்பொருள் ... தொடர்ச்சி ...

மழுங்கடிக்கச் செய்து சமூக சமய நல்லிணக்கம் இதன் மூலமாக சீர்குலைக்கப்படுகிறது. ஒட்டு மொத்த தமிழ் பேசும் சமூகமும் இதன் மூலம் தங்களது விவசாய காணிகள் குடியிருப்பு காணிகள் மதஸ் தளங்களுக்கு சொந்தமான காணிகள் என பல ஏக்கர் நிலங்கள் தொல்பொருள் என்ற போர்வையில் அபகரிக்கின்றனர். இவ்வாறான நிலையில் இருந்து விடுபட சமமான உரிமைகளை அனைவருக்கும் வழங்க வேண்டும் ஆட்சியாளர்கள் இதற்காக சிறுபான்மை இனத்தை பாதுகாக்க முடியாமல் போகாது ஒன்றிணைந்து கொண்டு செல்ல வேண்டும்.

"எங்களது அம்மா, அப்பா காலம் தொட்டு இங்கு நேர்த்தி பூசை என செய்கிறோம் எனது 30 நாள் குழந்தையுடன் இங்கு வந்து யுத்த காலத்தில் இருந்து மூன்று நாள் தங்கியிருந்ததுடன் இதன் வழியாக வந்து பிள்ளையார் தான் காப்பாற்றினார். எங்கள் மண் இது இதனை விட்டுக் கொடுக்க முடியாது" என தாய் ஒருவர் தென்னை மரவாடியின் வரலாறு தொடர்பில் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

எனவே தான் இம் மக்களின் மதசுதந் திரத்தை தடுக்காது உரிமைகளோடும் சுதந்திரத் தோடும் வாழ வழிசமைத்துக் கொடுக்க வேண்டும்.

• • •

## பாக்கு நீரிணை ... தொடர்ச்சி ...

மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

301 08 பாக்கு நீரினைய கடந்து சாதனை படைத்த திருமலை இந்துக் கல்லூரி மாணவன் தனுஸ் கோடி முதல் தலை மன்னார் வரை யான 32 கிலோ மீற்றர் தூரத்தை மிகக் குறைவான நேரத்தில் நீந்திக் கடந்து இலங்கையில் சாதனையை நிலைநாட்டியுள்ளார். 9 மணித்தியாலம் 37நிமிடம் 54 செக்கனில் நீந்திக் கடந்து இலங்கையில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

## இந்திய - இலங்கை ... தொடர்ச்சி ...

33 வருடம் இந்திய மண் ணில், தனிமை சிறையில், போதிய மருத்துவ வசதிகள் அடைக்கப்பட்டிருந்த சாந்தன் , நீதிமன்றால் விடுவிக்கப்பட்ட பின்னரும் இந்திய இலங்கை அரசுகளின் மெத்தனப் போக்கால் ஒன்றரை வருடம் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை காலை காலமானார் எனும் செய்தி எம்மக்கள் அனைவரையும் தாங்கொணா துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

33 வருடங்களுக்கு பின்னர் தன் மகனின் முகத்தை காணும் ஏக்கத்தில் காத்திருந்த அவரின் தாயார் மற்றும் குடும்பத்தவர்களின் துயரினை எந்த வார்த்தைகளும் ஆற்றுப்படுத்தப் போவதில்லை.

## கடல்வளங்களை ... தொடர்ச்சி ...

படகுகளின் செயலால் ஏற்படுகின்றன. இழுவைப் படகு மீன்பிடி என்பது, கடலின் அடிவரை உள்ள அனைத்தையும் வாரி அள்ளி எடுப்பதாகும். இந்த மீன்பிடி முறையில், வலையை வீசி, கடலின் அடி வரையுள்ள அனைத்தையும் அள்ளுவதால், மீன்களின் வகை, வளர்ச்சி கருத்தில் கொள்ளப்படுவதில்லை. கடலடித் தாவரங்கள் அழிகின்றன. இதனால், கடலடி உயிரியல் சம நிலையைப் பாதிக்கப்படுகிறது.

கடல் வாழ் உயிரினங்கள், கடலடித்தள உயிரியல் நிலைப்புக்கு வேண்டிய நுண்ணுயிரிகளும் உயிரினங்கள், கடலடி பவளப்பாறைகளும் முருகைக் கற்களும் அழிகின்றன. மீன்களின் முட்டைகளும் குஞ்சுகளும் அழிவதனால், மீன்களின் இனப்பெருக்கம் தடுக்கப்படுவதுடன், நீண்டகாலத்தில் மீனிருப்புக்குப் பாதிப்பு என பல சூழலியல் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றது.

வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு இந்தியப் பக்தர்கள் வருகை தரா, இந்தியப் பக்தர்களில்லாத திருவிழா நடைபெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசும் பல வழிகளிலும்

## அணுவாயுத ... தொடர்ச்சி ...

போரை நடத்தி வருகின்றனர். ஆனால் அவர்கள் நேரிடையாக மோதும் போது மனித குலத்தை நாசம் செய்யும் ஆணுவாயுதப்போராக அது மாறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நான்கு கட்ட ... தொடர்ச்சி ...

கடல் வழியிலான தாக்குதலை ரஸ்யா மேற் கொள்வதுடன், இந்த போர் ஒரு உலகப் போராக மாற்றமடையும். இந்தப் போரில் இரு தரப்பும் இரசாயண மற்றும் அணுவாயுதங்களை பயன்படுத்துவார்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொள்கிறோம்.

கொடிய இன அழிப்புபோரினால் சிறிலங்கா , இந்திய மற்றும் ஏனைய நாடுகளின் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் ஆயிரக் கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டும் காணா மல் ஆக்கப்பட்டவர்களாக்கப்பட்டும் இருக்கையில், அவர்களை தேடி அலையும் எம் தேச தாய்மார்களின் அவலத்தின் ஒட்டுமொத்த குறியீடாக சாந்தனின் தாயார் இன்று இருக்கிறார்.

இனியாவது, தடுத்துவைக்கப்பட்டவர்களினதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் விடுதலைகள் துரிதப்படுத்தப்படவேண்டும்.

**தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்டநீதியே.**

இந்திய மீனவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசை கோரிவிட்டது ஏன் அப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்கிறது என்பது புரியாத புதிரே.

இந்திய மத்திய அரசாங்கமானது வருடத்தில் குறிப்பிட்டளவான நாட்கள் இலங் கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கு மாறு கோருகிறதே தவிர, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையோ, இழுவைப் படகுகளால் ஏற்படும் சூழலியல் நீண்ட காலப் பிரச்சினையையோ கவனத்தில் எடுப்பதாக இல்லை. இவ்வாறான நிலையில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கும்?

• • •

## ரஸ்யாவுடன் ... தொடர்ச்சி ...

ஆட்டிலறி பீரங்கிகளுக்கான எறி கணைகளின் உற்பத்தியை அதி கரித்து அதனை உக்ரைனுக்கு வழங்கவும் பிரான்ஸ் தீர்மானித்துள் ளது.

எனினும் உக்ரைனுக்கு நேட்டோ தனது துருப்புக்களை அனுப்புவது தொடர்பில் பல நேட்டோ நாடுகள் எதிர்ப்புக்களை தெரிவித்துள் ளன.

## புவி வெப்ப ... தொடர்ச்சி ...

கிழமை(25) சென்று பார்வையிட்ட னர்.

அச்சந்தர்ப்பத்திலே அதற்கான வழிகாட்டலையும் கண்டல் தாவரங்கள் வளர்க்க வேண்டிய இடங்களையும் நேரடி கள விஜயம் மேற்கொண்டு அவதானித்து உரிய விடயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்தி எதிர்காலத்தில் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படக்கூடிய களப்பு பகுதிகளில் இந்த கண்டல் தாவரங்களை வளர்த்து எடுத்து உலகளாவிய வெப்பத்தை குறைப்பதற்கும் ஒட்சிசனின் அளவைக் கூட்டிக் கொள்வதற்குமானஒருசெயற்பாட்டுத்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் சுற்றுலா துறையை விருத்தி செய்து கரை யோர பகுதிகளை அழகுப்படுத்தும் முகமாகவும் இவ் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.ஹனி உட்பட துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## இந்தியா ... தொடர்ச்சி ...

பக்கவிளைவுகளை50 விகிதம் குறைக்கக்கூடியது.

'R+Cu' எனப்படும் இந்த புதிய மருந்து புற்றுநோய்களைத் தடுக்கும் oxygen radicals எனப்படும் மூலக்கூறுகளை கொண்டுள்ளது. இது புதிய புற்றுநொய்க் கலம்கள் உருவாகுவதை தடுக்கும் சக்தி கொண்டது. மேலும் புற்நோயக் கலம்கள் உடலின் ஒரு பகுதியில் இரந்து மறு பகுதிக்கு பரவுவதையும் தடுக்கும்.

கணையம், சுவாசப்பை மற்றும் வாய் புற்றுநோய்களுக்கு இந்த மருந்து சிறந்த சிகிச்சையை வழங்கும்.

100 ரூபாய்கள் பெறுமதியான இந்த மருந்து புற்றுநோய்க்கான மிகவும் மலிவான சிகிச்சை முறையாக கருதப்படுகின்றது. எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் இந்த மருந்து சந்தைப்படுத்தப்படவுள்ளது.

பக்கவிளைவுகள் தொடர்பில் மனிதர்களிலும் எலிகளிலும் பரிசோதனைகள் நடத்தப்பட்டு அவை வெற்றியளித்துள்ளன. ஆனால் புற்றுநோய்களை குணப்படுத்தும் பரிசோதனைகள் இதுவரையில் எலிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனிதர்களில் அவை மேற்கொள்ளப்பட்டு தகவல்களை சேகரிப்பதற்கு 5 வருடங்கள் எடுக்கும் என இந்த ஆய்வுக் குழுவின் தலைவர் கலாநிதி ராஜேந்திரா பட்வே தெரிவித்துள்ளார்.

## ரணிலின் ... தொடர்ச்சி ...

பயன்படுத்திக்கொண்டு, தேர்தலில் வென்றுவிட முடியும் என்ற உபாயத்துடன்தான் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதாகத் தெரிகின்றது. ஆனால், இந்த வியுகத்தில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால், இவர் ராஜபக்ஷக்களுடன் இணைந்திருப்பது போன்ற ஒரு தோற்றம் இருப்பதால், ராஜபக்ஷக்களை எதிர்க்கும் எந்தவொரு தரப்பும் இவரை ஆதரிக்காது.

இந்தப் பின்னணியில் ஐ.தே.க.வினரும் இவருக்கு வாக்களிக்க வேண்டும், மொட்டுக் கட்சியினரும் இவருக்கு வாக்களிக்க வேண்டும் ஏனைய தரப்பினரும் இவருக்கு வாக்களிக்க வேண்டும் ஏனைய சிறுபான்மையினரும் இவருக்கு வாக்களிக்க வேண்டுமானால், ஒரு சுயாதீன வேட்பாளராகவே இவர் போட்டியிட வேண்டியிருக்கும்.

**பொதுஜன பெரமுன தமது வேட்பாளரை இதுவரை அறிவிக் கவில்லை. இந்தத் தேர்தலில் அவர்கள் எவ் வாறான நிலைப்பாட்டை எடுப்பார்கள்?**

அரசியலில் அசைக்க முடியாதவர்கள் என்ற அவர்களுடைய நிலை இப்போது வீழ்ச்சியடைந்துவிட்டது. உடனடியாக அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவர்களைப் பொறுத்தவரை சாத்தியமானதல்ல. அதனால், அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது அவர்களுடைய நீண்டகால இலக்காக இருந்தாலும், தம்மைப் பாதுகாப்பது என்பதுதான் அவர்களுடைய உடனடியான தேவை. தம்மைப் பாதுகாக்கக்கூடிய ஒருவர் அதிகாரத்தில் இருப்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். அப்படிப் பார்க்கப்போனால், சஜித் பிரேமதாஸவோ, அநுரகுமாரவோ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், அது ராஜபக்ஷக்களுக்கு நெருக்கடியைக் கொடுப்பதாகவே இருக்கும். அவர்களுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும்.

ஆனால், ரணில் ஜனாதிபதியானால், தமது அரசியலுக்கு அவர் நெருக்கடிகளை ஏற்படுத்தமாட்டர் என்ற நம்பிக்கை ராஜபக்ஷக்களுக்கு உள்ளது. அதனால், ரணில் ஜனாதிபதியாக வருவதைத்தான் அவர்கள் விரும்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளது.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.